ISSN 1391-9504

விஜய்

Vijey விஜய்

22.06.2016 - மலர் 13, இதழ் 17

விலை
ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வீட்டின் இந்தப் பகுதி குறிப்பது;

1. சமையலறை 2. படுக்கையறை 3. வரவேற்பறை

2. உலக விடயங்களைப் பார்த்தும் கேட்டும் அறிந்துகொள்வதற்கான சாதனமொன்று இங்கு காணப்படுகின்றது. அது என்ன?

1. புத்தகங்கள் 2. தொலைக்காட்சி 3. கண்ணாடி

3. இப்பகுதிக்கு காற்றோட்டமும் வெளிச்சமும் கிடைப்பதற்காக அமைக்கப்பட்டிருப்பது எது?

1. தொலைக்காட்சி 2. மலர்கள் 3. ஜன்னல்

4. இங்கு தரையில் விரிக்கப்பட்டிருப்பது யாது?

1. கம்பளம் 2. பாய் 3. மெத்தை

இங்கிருக்கும் பிராணிகளில் ஏதேனுமொன்றை உங்கள் செல்லப் பிராணியாகக் கருதி, குட்டிக் கவிதை ஒன்றை அமைக்க

....

....

....

....

....

....

....

....

படங்களுக்குப் பொருத்தமான சொற்களை தெரிவுசெய்து எழுதுக

பாட்டுப் பாடுதல்	புத்தகம் வாசித்தல்
உணவு தயாரித்தல்	மீன் வளர்ப்பு
ஒவியம் வரைதல்	

....

....

....

....

....

1. இந்தக் காட்சியில் காணப்படும் பிராணிகளைக் குறிப்பிடுங்கள்.

....

2. படத்தில் காணப்படும் நபர், கால்வாய் அருகில் அமர்ந்து என்ன செய்துகொண்டிருக்கிறார்?

....

3. குதிரையும் குட்டியும் கால்வாய் அருகே வர முடியாதவாறு அமைக்கப்பட்டிருப்பது யாது?

.... -ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

இயற்கையுடன் இணைந்து அனர்த்தங்களைத் தடுத்திடுவோம்

மண்சரிவு, வெள்ளம், வறட்சி என்று பல இயற்கை அனர்த்தங்களை நாம் வருடம் தோறும் எதிர்நோக்கி வருகின்றோம். இயற்கை அனர்த்தங்களை தவிர்க்க முடியாது என்பது உண்மையாயினும், அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைக்க முடியும். அதற்கான ஒரே வழி இயற்கையுடன் இணைந்த வாழ்க்கையை வாழ்வதாகும். இயற்கையுடன் இணைந்த வாழ்க்கை முறைக்கு சிறந்த உதாரணமாக, எமது முன்னோர்களின் வாழ்க்கை முறையை எடுத்துக்கொள்ள முடியும். அவர்கள் தாம் வாழ்ந்த சுற்றாடலுக்கு ஒருபோதும் தீங்கு விளைவிக்கவில்லை. மரங்கள், காடுகள், நீர்நிலைகள், உயிரினங்கள் என இயற்கையின் கொடைகளை அவர்கள் நேசித்தார்கள்.



எனினும், இன்றைய காலத்தைப் பொறுத்தவரையில் சுற்றாடலுடனான இணைப்பு மிகவும் குறைந்துவிட்டது. இவற்றை எல்லாம் பொருட்படுத்தாது இயற்கைக்குப் புறம்பான காரியங்களில் ஈடுபடுவதனால்தான் இயற்கையின் பெரும் பாதிப்புகளை நாம் எதிர்கொள் கின்றோம். பல ஆண்டுகளுக்கு முன்னர் வீதிகளின் இரு மருங்குகளிலும் இருந்த நிழல்தரும் மரங்கள், இன்றளவில் அபிவிருத்தி என்ற பெயரினால் அழிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். மரங்கள் அருகி வருவ தனால் பல பாதிப்புகள் ஏற்படுகின்றன.

அவ்வாறே, நீர்நிலைகள் மாசுபடுத்தப் படுவதனால் சுத்தமான குடிநீர் அருகி வருகின்றது. நீர்நிலைகளை மறித்து நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன. இதனால், நீரின் பாதை தடைப்படுகின்றது. இதன் காரணமாக, மழைக்காலத்தில் வெள்ளப்பெருக்கு, நிலம் கீழிறங்கல் போன்ற ஆபத்துக் கள் எதிர்கொள்ளப்படுகின்றன. ஆகவே, இயற்கையோடி ணைந்து வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு நாம் ஆளாகியுள்ளோம்.

தாவரங்களை வளர்த்தல், நீர் வளம் மிக்க பகுதிகளைப் பாதுகாத்தல், காடுகளைப் பாதுகாத்தல் போன்றவற்றை இதற்கான சிறந்த வழிமுறைகளாகக் கூறலாம்.

பாடசாலை பிள்ளைகளாகிய நீங்கள்,

இந்தப் பிரச்சினையை உணர்ந்துகொள்வது அவசியமாகும். இளம் சந்ததியினர் என்ற முறையில் நீங்கள் இயற்கைச் சூழலை பாதுகாக்க முன்வருவது கட்டா யமாகும். அதற்கமைய, சிறுவயது முதலே மரங்களை நடுவதற்கு பழகிக்கொள்ளுங்கள். இது நாட்டுக்காக ஆற்றும் சிறந்த சேவை யாக அமையும். அவ்வாறே, நீங்கள் வாழும் பகுதியில் உள்ள நீர்நிலைகள் மாசடையக்கூடியவாறான செயற்பாடுகளுக்கு இடமளிக்காதீர்கள். நீர்நிலைகளில் மரங்களை வெட்டி வீழ்த்துதல், குப்பை கொட்டு தல், கழிவுநீர் சேர்தல், மண் அகழ்தல் போன்றவை நீர்நிலைகள் மாசடைவதற்கான வழிகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசைமிக்க செல்வந்தன்

முன்னொரு காலத்தில் கோடீஸ்வரன் என்னும் பணக்காரர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் பேராசை பிடித்த கஞ்சனாக இருந்தார். ஒருநாள், அவர் தேங்காய் வாங்குவதற்காக சந்தைக்கு சென்றார். தேங்காய் வியாபாரியிடம் தேங்காயின் விலையைக் கேட்டார். வியாபாரி, "தேங்காய் ஒன்று நான்கு ரூபாய்" என்றான். "நான்கு ரூபாயா? விலை அதிகம்; மூன்று ரூபாய் தருகிறேன்" என்றான் கோடீஸ்வரன்.

"நீங்கள் இங்கிருந்து ஒரு மைல் தூரம் சென்றால் அங்குள்ள சந்தையில் மூன்று ரூபாய்க்கு தேங்காய் கிடைக்கும்" என்றான் வியாபாரி.

'பணமே மிகவும் பெரியது. ஒரு ரூபாய் சேமிக்க ஒரு மைல் தூரம் நடப்பதில் என்ன தவறு' என மனதிற்குள் நினைத்துக்கொண்டு நடந்து சென்றார் கோடீஸ்வரன். ஒரு மைல் தூரம் கடந்த பின்னர் அங்கு வேறு ஒரு தேங்காய் வியாபாரியிடம் தேங்காயின் விலையைக் கேட்டார். "ஒரு தேங்காய் மூன்று ரூபாய்" என்றான் வியாபாரி. "மூன்று ரூபாயா? விலை மிகவும் அதிகம். இரண்டு ரூபாய்க்குத் தருவாயா?" எனக் கேட்டார் கோடீஸ்வரன்.

"நீங்கள் இங்கிருந்து ஒரு மைல் நடந்தால் அங்கே இரண்டு ரூபாய்க்குத் தேங்காய் கிடைக்கும்" என்றான் வியாபாரி. "பணமே மிக மிகப் பெரியது, ஒரு ரூபாய் சேமிக்க ஒரு மைல் நடந்தால் தவறு இல்லை" என முணுமுணுத்துக்கொண்டே நடக்கத் தொடங்கினார் கோடீஸ்வரன். அப்படியே ஒரு மைல் நடந்து சென்று அங்கிருந்த ஒரு தேங்காய் வியாபாரியிடம் விலையைக் கேட்டார். அந்த வியாபாரியோ "ஒன்றின் விலை இரண்டு ரூபாய்" என்றான். "இரண்டு ரூபாயா? விலை மிக அதிகம். உனக்கு ஒரு ரூபாய் தருகிறேன்" என்றான் கோடீஸ்வரன். "நீங்கள் ஒரு மைல் தூரம் சென்றால், கடற்கரை வரும் அங்கு என்றால் ஒரு ரூபாய்க்கு தேங்காய் கிடைக்கும்" என்றான் வியாபாரி.

'பணத்தின் அருமை இவர்களுக்கு என்ன தெரியும்? ஒரு ரூபாய் மிச்சம் பிடிக்க ஒரு மைல் நடப்பதில் தவறில்லை' என எண்ணிக் கொண்டு கடற்கரைப் பக்கமாகச் சென்றார். அங்கிருந்த ஒரு வியாபாரியிடம் தேங்காயின் விலையைக் கேட்டார். "ஒன்று ஒரு ரூபாய்" என்றான் வியாபாரி. "ஒரு ரூபாயா? விலை அதிகம். நான் ஐம்பது காசு தருகிறேன்" என்றார் கோடீஸ்வரன். அதற்கு அந்த வியாபாரி, "இந்த மரங்களில் ஒன்றின் மீது ஏறி பணம் கொடுக்காமலேயே நீங்கள் பறித்துக் கொள்ளலாமே" என்றான். "அதுவும் சரிதான்" என்றார் கோடீஸ்வரன். உடனே, மரத்தின் மீது ஏறியும் விட்டார். ஒரு தேங்காயைத் தன் இரு கைகளாலும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு பறிக்கப் பார்த்தார். ஆனால், கால்கள் சறுக்கி, தென்னை மரத்தில் இருந்து கீழே விழுந்தார். ஒரு தேங்காய்க்காக, உடம்பில் காயங்களும் காலில் எலும்பு முறிவும் ஏற்பட்டதை எண்ணி வருந்தினார் கோடீஸ்வரன்.

'பணத்தின் அருமை இவர்களுக்கு என்ன தெரியும்? ஒரு ரூபாய் மிச்சம் பிடிக்க ஒரு மைல் நடப்பதில் தவறில்லை' என எண்ணிக் கொண்டு கடற்கரைப் பக்கமாக கோடீஸ்வரன் சென்றார்'

செல்வச் சீமாட்டியும் சித்திரமும்

முன்னொரு காலத்தில் ஒரு முதிய செல்வச் சீமாட்டி தன்னை தத்ருபமாக வரையும் படி ஒரு புகழ்பெற்ற சித்திரக் கலைஞனிடம் கூறினாள். அவரும் அதற்கிணங்க பல நாட்கள் முயற்சித்து படத்தை வரைந்து முடித்தார். அதன் பின்னர் சீமாட்டியை தன் கலைக்கூடத்திற்கு அழைத்தார். சீமாட்டி தன் செல்லப் பிராணியான நாயுடன் கலைக்கூடத்திற்கு வந்தாள்.

அவள் தனது நாயிடம் "பாரடா! செல்லக் குட்டி! இது உன் எஜமானியம்மாள்" என்றாள். ஆனால், நாய் ஓவியத்தின் மீது அக்கறை காட்டாது இருந்தது. இதனை கண்ட சீமாட்டியோ சற்றுக் கோபமாக "இந்த ஓவியம் எனக்கு வேண்டாம். இது என்னைப் போன்று தத்ருபமாக இல்லை. அதனால்தான் என் நாய்கூட அதன் அருகில் செல்லவில்லை" என்றாள்.

பணக்காரர்களின் மனப்போக்கை நன்குணர்ந்த சித்திரக் கலைஞர். அந்த சீமாட்டியுடன் வாக்குவாதம் எதுவும் செய்யாது "மன்னிக்க வேண்டும் சீமாட்டியே! தயவு செய்து நாளை வாருங்கள். உங்கள் ஓவியத்தை சீர்செய்து தருகின்றேன். அப்போது உங்கள் நாயும் அதனை வாலாட்டிக்கொண்டே பார்க்கும்" என்றார்.

'சித்திரக் கூடத்திற்கு தனது செல்லப் பிராணியுடன் வந்தாள் சீமாட்டி. நாய் வாலை ஆட்டிக்கொண்டு ஓவியத்திற்கு அருகில் விரைந்து செல்வதைப் பார்த்தாள்'

அடுத்த நாள் சித்திரக் கூடத்திற்கு தனது செல்லப் பிராணியுடன் வந்தாள் சீமாட்டி. நாய் வாலை ஆட்டிக்கொண்டு ஓவியத்திற்கு அருகில் விரைந்து செல்வதைப் பார்த்தாள். ஆஹா... "பிரமாதம்! என்ன அழகு! என் நாய்க்கு படம் மிகவும் பிடித்திருக்கின்றது. அதனால் இதை எடுத்துச் செல்கிறேன்" என்று கூறி பெரும் தொகை பணத்தைக் கொடுத்து முழு மனதுடன் அதனை வாங்கிச் சென்றாள்.

சீமாட்டி சென்றதும் கலைஞன் வாய்விட்டுச் சிரித்தார். ஏனெனில், அவர் ஓவியத்தின் மீது ஈரமான மாமிசத் துண்டினைத் தடவி இருந்தார். அதன் மணமே நாயை ஈர்த்தது என எண்ணி மகிழ்ந்தார் கலைஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைச்சாலைகள் அமைக்கப்படுவது எவ்வாறு ஆரம்பமாகியது...?

உலகில் முதலாவது சிறைச்சாலை பன்னிரெண்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் கட்டப்பட்டு, 1672 ஆம் ஆண்டில் திருத்திய மைக்கப்பட்டது. ஆரம்ப காலங்களில் கடன்காரர்களையும் பிச்சைக்காரர்களையும், குடும்பத்தில் தொந்தரவு செய்பவர்களையும் தண்டிக்கும் நோக்குடன் சிறைச்சாலைகள் அமைக்கப்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன் பெரும்பாலும் எவ்வித விசாரணையுமின்றி பலர் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டனர். விசேடமாக அரசனுக் கெதிராகவும் அரசனின் கொடுங்கோலாட்சிக் கெதிராகவும் கிளர்ச்சி செய்த மக்களை சிறையில் அடைத்தனர். உதாரணமாக, பிரான்சிய புரட்சிக்கு முன் பல்லாயிரக் கணக்கானோர் 'பஸ்டில்' எனும் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டதை குறிப் பிடலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தான் முறையான நீதிமன்ற விசாரணைகள் மூலம் குற்றம் நிரூபிக்கப்பட்டால் மாத்திரமே சிறைச்சாலை களில் அடைத்து தண்டனை வழங்கப்படும் முறை ஆரம்பமாகியது. பாரிய குற்றங்களுக்காக சிலருக்கு மரண தண்டனை வழங்கும் முறையும் இக்காலகட்டத்தில் ஆரம்பமானது.

உலகின் மிகப் பெரிய சிறைச்சாலை ரஷ்யாவில் உள்ள 'க்ரெஸ்டி' சிறைச்சாலை ஆகும். இங்கு ஒரே நேரத்தில் நான்காயிரம் கைதிகளை அடைக்கக்கூடிய வசதிகள் உள்ளன. அதேவேளை, உலகின் மிகச் சிறிய சிறைச்சாலை ஸார்க் தீவில் உள்ளது. அங்கு ஒரே சமயத்தில் இருவரை மாத்திரமே அடைக்க முடியும்.

சில சந்தர்ப்பங்களில் சிறையில் இருந்த கைதிகள் நாடு கடத்தப்பட்டனர். இதன்படி இங்கிலாந்தின் குற்றவாளிகளை வெகு தொலைவில் உள்ள அவுஸ்திரேலியாவுக்கும் இந்தியாவின் கைதிகள் அந்தமான், நிக்கோபார் தீவுகளுக்கும் நாடுகடத் தப்பட்டனர். அதேவேளை, ரஷ்யக் கைதிகள் அந்நாட்டிற்குள்ளேயே வெகு தொலைவில் உள்ள சைபீரியன் காட்டுக்கும் அனுப்பப்பட்டனர். இவற்றை திறந்தவெளி சிறை என்றும் குறிப்பிட முடியும்.

-இரஞ்ஜித் ஜெயகர்

உலகின் மிகப் பெரிய சிறைச்சாலை ரஷ்யாவில் உள்ள 'க்ரெஸ்டி' சிறைச்சாலை என்பதும் மிகச் சிறிய சிறைச்சாலை ஸார்க் தீவில் அமைப்பெற்றுள்ள 'ஸார்க்' சிறைச்சாலை என்பதும் குறிப்பிடத் தக்கது.



வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் வாரம் 3 பரிசில்கள்!

★ Practical English Learning Software DVD

★ 4000 English Letter Writing Software

★ 8 GB Pen Drive

புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன்கிழமையிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்கத் தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

★ 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாராந்தம்...

★ ஆங்கிலம் கற்கும் மென்பொருள் DVD

★ 4000 ஆங்கில மாதிரிக் கடிதங்கள் அடங்கிய மென்பொருள்

★ 8GB பென் டிரைவ் போன்றன இலவசமாக வழங்கப்படும்.

08.06.2016 'தூவானம்' கேள்விக்கான விடை:
ஜப்பான்
Pendrive வெற்றியாளர்:
ஏ.சாருகாஷினி,
42/9, நேர்சிங் ஹோம் வீதி,
ஹட்டன்.

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை

Write Message
F Thoovaanam
என Type செய்து
40404 எனும்
இலக்கத்திற்கு
SMS செய்யவும்

அனுப்ப வேண்டிய முகவரி:
Pen Drive போட்டி
(22.06.2016)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

இவ்வார கூப்பன்:
22.06.2016
விடை: ....
பெயர்: ....
முகவரி: ....
தெ.பே.இல: ....
பாடசாலை: ....
தரம்: ....
....
கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரிய குடும்பத்தின்

எமது சூரியத் தொகுதியானது, ஐந்து பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் வாயுக்களாலும், தூசுக்களாலும் தோற்றம் பெற்றது. எமது பால்வெளி நட்சத்திர மண்டலத்தின் ஒரு பகுதியில் எமது சூரியத் தொகுதி அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



தோற்றம்

மிகப்பெரிய வாயு, தூசுகளின் கூட்டமான சோலார் நெபுலாவிலிருந்து உருவான வாயுக்கூட்டம் காரணமாகவும் நட்சத்திரங்களின் ஈர்ப்புச் சக்தியால் ஏற்பட்ட அதிர்வலைகள் காரணமாகவும் சூரியத் தொகுதி தோற்றம் பெற்றதாக வானியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

சூரியன் உயிர்ப்படைதல்

நெபுலா வெடித்து சுருங்கும் போது, அதனுடைய மையத்திலிருந்த வெப்பம் அதிகரித்த நேரத்தில் அணுவெடிப்பு எனப்படும் 'நியுக்ளியர் பிஷன்' ஏற்பட்டது. இதன் தாக்கத்தால் உருவாகியதே எமது சூரியத் தொகுதி மற்றும் சூரியன் ஆகும்.

மோதல் வலயம்

அணுவெடிப்பு காரணமாக, உருவாகிய எமது சூரியத் தொகுதியே மோதல் வலயம் என்பர்.

சந்திரனின் பிறப்பு

சூரியத் தொகுதியின் தோற்றத்தின் ஆரம்பகாலப்பகுதியில் செவ்வாய் போன்ற பெரிய கிரகம் ஒன்று பூமியுடன் மோதியதனால் சந்திரன் உருவாகியிருக்கலாம் என கருதப்படுகின்றது. அந்த வகையில் பூமியுடன் மோதிய ஆகாய வஸ்துகளின் சிதறல்கள் பிரபஞ்சம் முழுவதும் பரவியது. அதுவே, காலப்போக்கில், புவி ஈர்ப்புச்சக்தியின் காரணமாக, ஒன்றிணைந்து பூமியினை சுற்றிவரும் சந்திரனாக உருவாகியது.

சனியின் சந்திரன்

பிரமாண்டமான கிரகப் பொருள் ஒன்று மோதியதனால் சனிக் கிரகத்தின் சந்திரன் முழுவதும் அதிர்வலைகள் பரவியதோடு, அது பல துண்டுகளாக சிதறியது. இதனால், 130 கி.மீற்றர் அகலமும் 10 கி.மீற்றர் நீளமும் கொண்ட தூசுக்கள் உருவாகியது.

போபோஸ்

'போபோஸ்'என்பது செவ்வாயின் இரண்டு சந்திரன்களில் ஒன்றாகும். இது பூமியில் உள்ள ஒரு நகரத்தின் அளவினைக் கொண்ட சிறிய சந்திரன் ஆகும். இந்த சந்திரன் செவ்வாயை சுற்றி வருவதுடன், அதன் அருகாமையிலும் செல்கின்றது. அதனால், எதிர்காலத்தில் போபோஸ் செவ்வாய்க்கிரகத்துடன் மோதும் வாய்ப்பு உள்ளதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

தூமகேது

அண்டவெளியில் ஏற்பட்ட மோதல்களின் விளைவால் துண்டு துண்டாகச் சிதறிய தூமகேதுக்கள் சூரியனைச் சுற்றிச் சுழலாமல், வியாழனை சுற்றிச் சுழன்றுள்ளது. இதனை 1993 ஆம் ஆண்டு மார்ச் 24 ஆம் திகதி ஜீன், கெரலாயின் ஷுமார்க்கர் ஆகிய வானிலை அறிஞர்களும் இவர்களுடன் இணைந்து டேவிட் லீவித்து எனும் வானியல் விஞ்ஞானக் குழுவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோற்றம்

களும் கண்டுபிடித்துள்ளார்கள்.

சிறந்த சான்று

1994 ஆம் ஆண்டு ஜூலை மாதமளவில் 'ஷுமாக்கா லெவி 9' எனும் தூமகேதுவானது, வியாழனின் ஈர்ப்பு விசையால் அதன் சுற்றுப்பாதையை கடக்கும் போது வியாழனுடன் மோதியது. இந்த மோதலின் விளைவால் பல மில்லியன் அணுகுண்டுகள் வெடிப்புக்கு சமமான சக்தி பிறப்பிக்கப்பட்டது.

பூமியில் பள்ளங்கள்

எமது பூமியிலும் பல வான்பொருள் (விண்கல்) மோதல்கள் நிகழ்ந்துள்ளன. பூமியில் நான்கில் மூன்று பங்கு நீரில் மூழ்கியுள்ளமையால் பெரும்பாலான விண்கற்கள் கடலிலேயே விழுந்துள்ளன. இதனால் பூமியில் பாரிய பள்ளங்கள் உருவாகவில்லை. எனினும் சில விண்கற்கள் தரையில் விழுந்ததால் பாரிய பள்ளங்கள் ஏற்பட்டன. அந்த வகையில் மெக்சிக்கோ வளைகுடாவில் விண்கல் தாக்கத்தால் ஏற்பட்ட 'ச்சீவலு' எனும் பள்ளத்தின் சுவடுகளை இன்றும் நாம் காண முடியும்.

மறையும் சுவடுகள்

விண்கற்கள் மோதலினால் ஏற்பட்ட பள்ளங்களை பூமியில் பல இடங்களில் காணப்படினும். அவை தற்போது அழிவடைந்தே வருகின்றன. எனினும் கனடாவில் விண்கல் மோதலினால் உருவாகிய பள்ளம் ஒன்று இன்று வரை அழியாமல் உள்ளது. இதன் சுற்றளவு 100 கி.மீற்றர் ஆகும்.

டைனோசர்கள்

விண்கல் மோதலினால் 'டைனோசர்கள்' முற்றாக அழிந்ததாக கருதப்படுகின்றது. இந்த நிகழ்வு 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்ததாக நம்பப்பட்டது, இவ்வாறான பல விண்கற்கள் விழுந்த இடங்கள் இன்றும் யுக்கடென் குடா, மெக்சிக்கோ பகுதிகளில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலிய புறநகர்ப்பகுதியில் விண்கல் தாக்கத்தால் உருவாகிய பள்ளம் ஒன்றினை காண முடிகின்றது. இந்த பள்ளம் சுமார் 3 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் உருவாகியுள்ளது. இது உருவாக காரணமாகிய விண்கல் தரையினை நோக்கி மணித்தியாலத்திற்கு 50 ஆயிரம் கி.மீற்றர் வேகத்தில் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

துன்குஸ்க்கா

தற்போது பூமியில் விண்கல் விழுந்த பள்ளங்கள் 170 காணப்படுவதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இவை ஐரோப்பா, வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் காணப்படுகின்றன. அந்த வகையில் சைபீரியாவின் துன்குஸ்க்கா பகுதியில் 1908 ஆம் ஆண்டு விண்கல் ஒன்று விழுந்து வெடித்தது. இதனால் ஆயிரம் ஹெக்டயார் அளவு வனாந்தரம் பெரும் பாதிப்புக்குள்ளானது.

ஆபத்தில்லை

சூரியத்தொகுதி பிரபஞ்சத்தின் ஆபத்தான வலயத்தில் அமைந்துள்ளது என்ற கருத்தை விஞ்ஞானிகள் நிராகரித்துள்ளார்கள். இதேவேளை, எமது சூரியத் தொகுதியில் கிரகங்கள், சந்திரன்கள் மற்றும் விண்கற்கள் உருவாகிய காலப்பகுதிகளில் சுதந்திரமாக உலாவிய விண் பொருட்கள் அனைத்தையும் பிணைத்துக்கொண்டன. இதனால் எமது பூமியுடன் மோதவிருந்த பல விண்கற்கள் அளவில் குறைந்து போயின. பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் ஷுமாக்கர், லெவி போன்ற விண்கற்களின் மோதல்கள் பரவலாக இடம் பெற்ற போதிலும் தற்போது அவ்வாறான சம்பவங்கள் மிகவும் அரிதாகவே இடம்பெறுகின்றன.

பாதுகாப்பான வலயம்

4 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றம் பெற்ற மனித இனம் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. இது எமது பூமி பாதுகாப்பான வலயத்தில் அமைந்துள்ளமைக்கு சிறந்த சான்றாகும். மேலும் பிரபஞ்சம் பற்றிய ஆய்வுகளை தொடர்ந்து மேற்கொள்வதால் எமது எதிர்கால சந்ததிகளுக்கு இந்த புவி மேலும் பாதுகாப்பாக அமையும் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

(இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-II)

பெயர்: ....

01) **பந்தியை வாசித்து, வினாக்களுக்கு விடை தருக.**

வீட்டின் முற்றத்தில் பசு, ஆடு என்பன கட்டப்பட்டிருந்தன. வீட்டின் மூலையில் இரண்டு நெல் மூட்டைகள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றிற்கு அருகில் திரிகைக்கல் ஓய்வெடுத்துக்கொண்டிருந்தது. சமயலறையில் பாத்திரங்கள் ஒழுங்காக அடுக்கப்பட்டிருந்தன. அருகாமையில் வெங்காய மூட்டை ஒன்று காணப்பட்டது. நடுவதற்காக சோளக் கதிர்கள் குவிந்து கிடந்தன. வீட்டு முற்றத்தின் ஓரத்தில் மாட்டு வண்டியும், அதன் அருகில் மாடு ஒன்று புல்லை அசைபோட்டுக்கொண்டும் இருந்தது.

1. இப்பந்தி குறித்துக் காட்டும் சூழல் யாது?
 ....
2. வீட்டு முற்றத்தில் காணப்பட்டவை எவை?
 ....
3. பந்தியில் உள்ள ஓர் இடப்பொருள் தருக.
 ....
4. இங்கு குறிப்பிடப்படும் தானியம் ஒன்று தருக.
 ....
5. பந்தியில் இருந்து இறந்த கால வினைச்சொல் ஒன்று தருக.
 ....

02) **கீழே தரப்பட்டுள்ள சொற்கூட்டத்திற்குப் பொருத்தமான தனிச்சொல்லைத் தருக.**

1. பிறருக்கு எதையும் கொடுக்காதவன்: ....
2. கணவனை இழந்தவள்: ....
3. தாய் - தந்தை இல்லாதவர்: ....

03) **இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை தெரிக.**

1. அரசன் நாட்டை ஆண்டான். இங்கு அரசன்;
 ....
 (உயர்திணை தன்மை, உயர்திணை படர்க்கை)
2. உழவன் வயலை ....
 (வெட்டினான், உழுதான்)

04) **ஆங்கில வாக்கியத்தின் கருத்தினை தமிழில் எழுதுக.**

1. Shall we wash our legs:- ....
2. They are my class friends:- ....

05) **கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களின் கருத்தினை தமிழில் தருக.**

1. அப்பி இஸ்பிரிதாலயட்ட யமு:- ....
2. மகே மவ குருவரியக்:- ....

06) **கீழ் காணும் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கீறிடுக.**

01. பின்வருவனவற்றுள் அதிக இதழ்களைக் கொண்ட பூ எது?
 1. மல்லிகை 2. சூரியகாந்தி
 3. செவ்வரத்தை 4. அலரி

02. வேரின் மூலம் தண்டைப் பற்றிக்கொண்டு வளரும் தாவரம்;
 1. வெற்றிலை 2. ஆத்தாவாரி
 3. கொடித்தோடை 4. மல்லிகை

03. பம்பரகந்த என்பது ஒரு;
 1. ஆறு 2. நீர்வீழ்ச்சி
 3. தீவு 4. புண்ணிய பூமி

04. அரச இலச்சினையில் காண முடியாதது;
 1. பூரண கும்பம் 2. சூரிய-சந்திரன்
 3. நெற்கதிர் 4. அரச இலை

05. மின்குமிழின் இழை ஆக்கப்பட்டுள்ள உலோகம்;
 1. பித்தளை 2. செம்பு
 3. தங்குதன் 4. ஈயம்

06. நீருடன் கலக்கும்போது, நீரின் மேற்பரப்பில் மிதக்காத திரவம்;
 1. பெற்றோல் 2. டீசல்
 3. மண்ணெண்ணெய் 4. வினாகிரி

07. நல்ல நடத்தைகளைப் பின்பற்றுவதால் கிடைக்கும் நன்மை அல்லாதது;
 1. கோபம் உண்டாகும் 2. பிரச்சினைகள் தீரும்
 3. மன அமைதி கிடைக்கும் 4. ஒற்றுமை ஓங்கும்

08. விற்றமின் C குறைபாட்டால் ஏற்படக்கூடிய நோய் எது?
 1. யானைக்கால் 2. குருதிச்சோகை
 3. என்புருக்கி 4. ஸ்கேவி நோய்

09. அதிகளவில் புரதத்தைக் கொண்ட தாவர உணவு;
 1. சோயா 2. நெல்
 3. பயறு 4. சோளம்

10. இலங்கையில் எவருடைய காலத்தில் பௌத்த மதம் பரவியது?
 1. ஸ்ரீ சுமங்கல தேரர் 2. C.W.W. கன்னங்கர
 3. துட்டகைமுனு 4. தேவநம்பியதீசன்

(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)

முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-I)

(ஜூன் 15 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

01. 1	05. 1	09. 2	12. 3
02. 2	06. 1	10. 3	13. 2
03. 2	07. 3	11. 3	14. 1
04. 3	08. 1		

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடக பாடநெறி பாகம் II பாடம் 109

வண்ணத் தொலைக்காட்சி தொடர்பான ஆய்வுகள்

1937 ஆம் ஆண்டளவில் ஜோன் லூகி தனது ஆய்வுப் பணிகளிலிருந்து ஒதுங்கத் தொடங்கியதுடன், அவரின் முக்கிய ஆய்வுகூடமொன்றும் தீயில் கருகியபோதிலும் அவரது மற்றொரு கண்டுபிடிப்பான தொலைக்காட்சி அலைவரிசையை

பணிகள் நெருக்கடியை எதிர்நோக்கியது. இதன் காரணமாக, இப்பணிகளை கைவிட்ட லூகி 'கெத்தோட்' டியூப்களைக் கொண்டு மேலதிக ஆய்வுகளை மேற்கொண்டார். குறிப்பாக, தொலைக்காட்சியில் வண்ணங்களைச் சேர்ப்பதற்கான தீவிர ஆய்வாக அது அமைந்தது. தொலைக்காட்சியில் வண்ணக் கலவையை சேர்க்க முடியும் என்று தீவிரமாக நம்பிய லூகி இதில் சோடை போகாமல் **1943** ஆம் ஆண்டு அதனை நிரூபிக்க முயன்றார்.

எனினும், அது முழுமையான வெற்றியை அளிக்கவில்லை.

மேற்கொள்ளக்கூடிய கருவி பிரபலமடையத் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து **1940** ஆம் ஆண்டளவில் லூகியின் நிறுவனம் சினிமா டெலிவிஷன் (Cinema Television) என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது.

இருப்பினும், இரண்டாம் உலகப் போரின் காரணமாகவும் அதில் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவுகளாலும் லூகியின் 'சினிமா டெலிவிஷன்' இருப்பினும் பிந்திய ஆண்டுகளில் வண்ணத் தொலைக்காட்சி உருவாவதற்கு லூகியின் முயற்சிகளே அடிப்படையாக அமைந்தது. தனது வாழ்நாள் முழுவதும் தொலைக்காட்சி தொடர்பான ஆய்வுகளிலேயே கழித்த ஜோன் லூகி **1946** ஆம் ஆண்டு ஜூன் மாதம் மரணமடைந்தார். இருப்பினும் லூகியின் அத்தனை தூர ஆய்வுகள், கண்டுபிடிப்புகள் தொலைக்காட்சியின் முழுமையான பரிணாமத்திற்கு அடித்தளமாக இருந்தது. இதன் அடையாளமாகவே, நாளடைவில் உலகம் பூராகவும் தொலைக்காட்சியின் பாவனை அதிகரிக்கத் தொடங்கியது.

ஆனால், அப்போது ஆரம்பக் கட்டமாக இருந்தமையால் ஒரு சிலரிடம் மாத்திரமே தொலைக்காட்சிப் பெட்டிகள் இருந்தன. நாளடைவில் தொலைக்காட்சிப் பெட்டிகள் பெருகியபோதிலும், ஒளிபரப்பு நிலையங்கள், இருக்கும் அளவிற்கே அதன் பாவனையை பெற முடிந்தது. எனவே, எந்தெந்த நாடுகளில் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள், ஒளிபரப்பு கோபுரங்கள் நிறுவப்பட்டிருந்தனவோ அங்கெல்லாம் தொலைக்காட்சியின் பாவனை அதிகரிக்கத் தொடங்கியது. முழுமையான ஒளித்தெளிவு இல்லாத போதிலும், ஒளிபரப்புத் திறனுக்கு ஏற்ப அவற்றை மக்கள் கண்டுகளிக்கத் தொடங்கினர். (தொடரும்)

-ரிஷபன்

தெரிந்து கொள்வோம்

★ உலகில் மிகவும் குறைந்த குடிசனத் தொகை கொண்ட நாடு எது?

வத்திக்கான்

★ பின்வரும் உலகப் புகழ்பெற்றவர்களில் காணப்படும் பிரதான ஒற்றுமை என்ன?

i. முஜிபுர் ரஃமான்
ii. ஜோன் எப் கென்னடி
iii. இந்திரா காந்தி
iv. ரனசிங்க பிரேமதாச

இவர்கள் அனைவரும் பதவிக்காலத்தில் சுடப்பட்டு உயிர் நீத்தவர்கள்.

★ 2015 இல் பௌதீகத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்கள் யார்? எதற்காக இப்பரிசு இவர்களுக்கு வழங்கப்பட்டது?

i. ஆர்தர் பி மெக்டோனல்ட் - கனடா
ii. தக்காகி கஜிடா - ஜப்பான்,

இவர்கள் நியுற்றோன்களின் நிறை, அளவு, திணிவு என்பவற்றைக் கண்டுபிடித்தமைக்கு வழங்கப்பட்டது.

★ I.O.C என்பது எந்த விளையாட்டுத்துறை நிறுவனத்தைக் குறிக்கும் சுருக்கமாகும் இதன் விரிவாக்கம் என்ன?

சர்வதேச ஒலிம்பிக் குழு (International Olympic Committe)

INTERNATIONAL OLYMPIC COMMITTEE

★ தமிழ் வளர்த்த புலவர்களில் இரட்டையர்கள் என அழைக்கப்படுபவர்கள் யாவர்?

i. முது சூரியர்
ii. இளஞ்சூரியர்

★ ஊழலால் புகழ்பெற்ற சர்வதிகார ஜனாதிபதி யார்? அவர் எந்த நாட்டு ஜனாதிபதி?

பேர்டினாட் மார்க்கோஸ், பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி

★ ஹோமரால் இயற்றப்பட்ட உலகப் புகழ்பெற்ற காவியங்கள் எவை?

i. இலியட்
ii. ஒடிசி

★ ஆண் ஒருவரின் மூளையின் சராசரி நிறை யாது?

1.5 கிலோகிராம்



தொகுப்பு: உடுவை பரந்தாமன்

Digitized by Noolaham Foundation.

தம்பேகொட அவலோகிதேஸ்வர

போதிசத்துவர் சிலை

இலங்கையில் தனிக் கருங்கல்லில் செதுக்கப்பட்ட இந்த சிலையானது, மொனராகலை மாவட்டத்திலுள்ள ஒக்கம்பிட்டிக்கு அருகில் தம்பேகொட என்னும் இடத்தில் உள்ளது.

10 மீற்றர் உயரமும் 40 தொன் முழு நிறையும் கொண்ட இந்த சிலையானது மனிதச் செயற்பாடுகளினால் சிதைவுற்று காணப்பட்டது. இதனால், 1990 ஆம் ஆண்டளவில் தொல்பொருளியல் திணைக்களத்தால் சீரமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அரச காலத்து ஆபரணங்களுடன் செதுக்கப்பட்ட போதிசத்துவர் சிலையின் பாதுகாப்பிற்காக காவல் சிலைகள் இருந்திருக்கலாம் என சில சான்றுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. அநுராதபுர யுகத்தின் பிற்பகுதியில் இலங்கையில் போதிசத்துவர் மீதான வழிபாடு புகழ்பெற்றிருந்தமை இந்தச் சிலையின்மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (-அ)







noolaham.org | aavanaham.org

மூன்றாம் நடுவரிடம் முறையிடும் விதிமுறையில் மாற்றம் வரலாம்...

கிரிக்கெட் போட்டிகளில் மூன்றாம் நடுவரின் தீர்ப்பை கோருவதில் உள்ள விதிமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இலங்கை- இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் ஏற்பட்ட ஒரு நிகழ்வே இத்தகைய சூழலை ஏற்படுத்தியிருப்பதாக கூறப்படுகின்றது.

அதாவது, இங்கிலாந்து அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் எலெக்ஸ் ஹேல்ஸ் 58 ஓட்டங்களுடன் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கையில் இலங்கை அணியின் நுவன் பிரதீப் வீசிய பந்து விக்கெட்டில் பட்டதால் எலெக்ஸ் ஆட்டமிழந்தார். ஆனால், அப்போது நடுவராக கடமையாற்றிய அவுஸ்திரேலிய நடுவர் ரொட்னி டக்கரினால் நுவன் பிரதீப் வீசிய பந்து 'நோ போல்' என அறிவிக்கப்பட்டது. இதனால், எலெக்ஸ் ஆட்டமிழக்கவில்லை எனவும் தொடர்ந்து ஆடுமாறும் பணிக்கப்பட்டார். அந்த சந்தர்ப்பத்தில் இங்கிலாந்து அணி 5 விக்கெட் இழப்பிற்கு 132 ஓட்டங்களையே பெற்றிருந்தது. தப்பிப் பிழைத்த எலெக்ஸ் தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடியதால் அவர் 94 ஓட்டங்களை பெற்றார். இருப்பினும், நுவன் பிரதீப் பந்து வீசுவதை தொலைக்காட்சி 'ரீப்ளே'யில் காட்டும் போது அவரது கால் பாதம் கோட்டின் உட்புறம்தான் இருப்பது நிரூபணமாகியது. இருப்பினும், பந்து தடுக்கும் அணியினால் இவ்வாறான சந்தர்ப்பத்தில் மூன்றாவது நடுவரின் தீர்ப்பை கோருவதற்கான விதிமுறை அனுகூலங்கள் இல்லை. துடுப்பாட்ட வீரருக்கு தேவையென்றால் மாத்திரமே மூன்றாம் நடுவரிடம் முறையிட முடியும்.

எனவே, பந்துவீச்சாளர்களுக்கு இத்தகையவாறு மூன்றாம் நடுவரிடம் முறையிடக்கூடிய விதிமுறை சாதகங்கள் இல்லாதது, சமநிலை இல்லாததாக தோன்றுவதால் இனிவரும் காலங்களில் இத்தகைய விடயங்களில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்படக் கூடிய சாத்தியங்கள் இருப்பதாக கருதப்படுகின்றது.

குறிப்பு: பிந்திய செய்திகளின்படி, குறித்த நடுவர் தனது இச்செயலுக்காக மன்னிப்புக் கோரியுள்ளார்.

பாகிஸ்தான் அணியின் புதிய பயிற்றுனர்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்றுனராக தென்னாபிரிக்காவைச் சேர்ந்த மிக்கி ஆர்தர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மிக்கி ஆத்தர் இதற்கு முன்னர் 2005- 2010 வருட காலங்களில் தென்னாபிரிக்காவிலும், 2011- 2013 காலங்களில் அவுஸ்திரேலியாவிலும் தலைமை பயிற்றுனராக கடமையாற்றியிருந்தார். மிக்கி ஆத்தர் இரண்டு வருடகால ஒப்பந்த அடிப்படையில் பாகிஸ்தான் அணியின் பயிற்றுனராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வலைப்பந்தாட்ட அணியில் முன்னாள் தலைவி இல்லை...

எதிர்வரும் ஆசிய கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டிகளை இலக்காகக் கொண்ட மகளிர் பிரிவின் 12 பேரைக் கொண்ட குழுவின் பட்டியல் இறுதி

செய்யப்பட்டுள்ள அதேவேளை, கடந்த உலகக் கிண்ண வலைப்பந்தாட்ட போட்டிகளில் இலங்கை அணியின் தலைவியாக இடம்பெற்றிருந்த சேமினி அல்விஸ் இந்த இறுதி 12 பேரின் பட்டியலில் இடம்பெறாதது குறித்து வாதப் பிரதிவாதங்கள் எழுந்துள்ளன.

இருப்பினும் இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள தெரிவுக்குழுவின் தலைவியான சந்திரானி பத்திராஜ, உலகக் கிண்ண அணியின் தலைவி 12 பேரின் பட்டியலில் இடம்பெறாத போதிலும், தாம் 15 பேரைக் கொண்ட பட்டியலை கொண்டிருப்பதாகவும் இதில் முன்னாள் தலைவி சேமினி உட்பட மூன்று பேர் மேலதிக (உதிரி) வீராங்கனைகளாக இடம்பெற்றிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உயிர் பல்வகைமை தொடர்பிலான தேசிய மூலோபாய செயற்பாட்டு திட்டத்தை வெளியிடும் சமகாலத்தில் உயிர் பல்வகைமை செயலகம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட்டம் ஆகியன "அத" பத்திரிகையுடன் இணைந்து மேற்கொள்ளும் செயற்திட்டம்.

உயிர் பல்வகைமை கெமரா கண்களில்
புகைப்படப் போட்டி

ரூபா 100,000 ஐ வெல்லுங்கள்

புகைப்படங்களை பொறுப்பேற்கும் இறுதித் திகதி ஜூன் 27

முதல் பரிசு ரூபா	: ரூ:50,000
இரண்டாம் பரிசு ரூபா	: ரூ:30,000
மூன்றாம் பரிசு ரூபா	: ரூ:20,000

மேலும் சிறந்த 100 புகைப்படங்களுக்கு சான்றிதழ்

இன்றைய தினத்தின் சிறந்த புகைப்படம் எனும் தலைப்பில் 25 புகைப்படங்கள் அடுத்தடுத்து 25 நாட்களுக்கு "அத" பத்திரிகையிலும் ada.lk இணையத் தளத்திலும் வெளியிடப்படும். புகைப்படங்கள் ஜூன் 06 ஆம் திகதி தொடக்கம் பிரசுரமாகி வருகின்றன.

போட்டி விதிமுறைகள்

♦ உயிர் பல்வகைமையை உணர்த்தும் இயற்கை அழகியலை கொண்டதாக புகைப்படம் இருத்தல் வேண்டும். ♦ புகைப்படம் செயற்கையாக உருவாக்கப்பட்ட படமாக இருத்தல் கூடாது. புகைப்படம் 8X12 அளவிலான பிரிண்ட் போடப்பட்டதாக இருத்தல் வேண்டும். ♦ ஈமெயில் செய்வதாயின் 8X12 அளவில் வேண்டும். 300 ரெசலூஷன் கொண்டதாக இருத்தல் வேண்டும். மூலப்பிரதி போட்டியாளர் வசம் இருத்தல் வேண்டும். தேவைப்படின் மூலப்பிரதியை முன்வைக்கக்கூடியதாக இருக்கவேண்டும். இதற்கு முன்னர் ஊடகங்களில் வெளியிடப்படாததாகவும் எந்தவொரு கண்காட்சியிலும் வெற்றி பெறாத புகைப்படமாகவும் இருத்தல் வேண்டும். ♦ புகைப்படத்தை அதன் உரித்துடையவருக்கு மீள வழங்குவதற்கு எவ்வகையிலும் நிறுவனம் பொறுப்பாகமாட்டாது. ♦ புகைப்படத்தை போட்டிக்கு அனுப்பிய பின்னர் விண்ணப்பதாரி மேற்காணும் விதிமுறைகள் அனைத்திற்கும் கட்டுப்பட்டவராக கருதப்படும். ♦ தேர்ந்தெடுக்கப்படும் புகைப்படங்களை கல்வித்துறை சார்ந்த நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தும் உரிமை போட்டி ஏற்பாட்டுக் குழுவிற்கு உரியதே.

புகைப்படத்தை அனுப்பக்கூடிய வழிமுறைகள்
"அத" பத்திரிகை
இல. 08, ஹுனுபிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு - 02
ஈமெயில்: adanewspaper@gmail.com
தொலைபேசி: 011 2479642/ 011 2479640.

BIOFIN THE BIODIVERSITY FINANCE INITIATIVE
UNDP Empowered lives. Resilient nations.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்ப்பல்வகைமை என்றால்...

'உயிர்ப்பல்வகைமை' என்பது, பூமியில் வாழும் பல்வேறுபட்ட உயிரினங்களைக் குறிக்கின்றது. பல்வேறு மரங்கள், பல்வேறு விலங்குகள் மற்றும் பல்வேறுபட்ட நுண்ணங்கிகள் என்பன இதில் அடங்கும். அத்துடன், அவை வாழ்கின்ற, ஒன்றுடன் ஒன்று தொடர்புகொள்கின்ற சூழல் தொகுதிகளும் இதற்குள் அடங்கும்.

01 மரபியற் பல்வகைமை

குறிப்பிட்டதோர் இனத்தைச் சார்ந்ததாக பலதரப்பட்ட உயிரினங்கள் இருக்கும் நிலையே மரபியற் பல்வகைமை எனப்படுகின்றது. பூமியில் வசிக்கும் ஒவ்வோர் உயிரினத்திற்கும் உரிய தகவல்கள் இந்த மரபியற் பல்வகைமைக்குள் அடங்கியுள்ளன. குறிப்பிட்ட உயிரினம் உயிர் பிழைத்து வாழ்வதற்கு சாதகமான நிலமையாக இது கருதப்படுகின்றது.

02 இனப் பல்வகைமை

குறிப்பிட்டதொரு பகுதியில் வசிக்கும் உயிரினங்களின் எண்ணிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய வளம் என்பன இனப் பல்வகைமையினுள் அடங்கும். இனப் பல்வகைமையானது, உலகம்தோறும் அல்லது கண்டங்கள் தோறும் சம அளவில் காணப்படுவதில்லை.

03 சூழல் தொகுதி பல்வகைமை

ஒன்றுடன் ஒன்று வேறுபட்ட அளவில் காணப்படும் சூழல் தொகுதிகள் இதில் அடங்கும். மிகப் பெரிய காடாக இருந்தாலும் சிறிய குளமாக இருந்தாலும் அவை இரு வேறு சூழல் தொகுதிகளாகவே கருதப்படுகின்றன.

1985
உயிரியல் விஞ்ஞான பல்வகைமை (Biological Diversity) என்பதற்கு பதிலாக உயிர்ப்பல்வகைமை (Biodiversity) என்ற பதம் 1985ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு வந்தது.

உயிர்ப்பல்வ

BIODIVER

உயிரியல் வகைப்பாட்டிற்கமைய, ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்டு இருக்கின்ற **மில்லியன் கணக்கிலான** *விலங்கு மற்றும் தாவர இனங்கள் இந்த உயிர்ப்பல்வகைமையில் உள்ளடங்குகின்றன.*

இது இற்றைக்கு **4.5 பில்லியன்** ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த உயிர்ப் பரிணாம வளர்ச்சியின் விளைவாகும்.

உலகின் இருப்பிற்கு அத்தியாவசியமான ஓர் அம்சமாக 'உயிர்ப்பல்
றது. உலகில் வாழும் மில்லியன் கணக்கான தாவரங்கள் மற்றும் விலங்
பல்வகைமை அமைந்துள்ளது. கண்களுக்குப் புலப்படும் உயிரினம் முத
நுண்ணங்கிகள் வரை இதில் அடங்குகின்றன. அதேபோன்று, சமுத்திர
பல்வகைமைக்குள் உள்ளடங்குகின்றன. உயிர்ப்பல்வகைமையினைப்
இருப்புக்கு அவசியமாகும். இதன் காரணமாகவே, ஐ... நாடுகள் ச
அமைப்புக்கள் இந்த உயிர்ப்பல்வகைமையினைப் பா...ப்பதற்காக,
வகையிலான பல நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்ற



நில வரலாற்றுக் காலச் சுருள்

விஞ்ஞான கணிப்பீடுகளின்படி, பூமி 4.5 பில்லியன் ஆண்டுகள் பழமை வாய்ந்தது. இந்த நில வரலாற்றுக் காலச் சுருளானது (Geological Time Spiral), பல்வேறுபட்ட காலப்பகுதிகளில் பூமியில் தோன்றிய உயிரினங்களின் பரிணாமத்தினை சுட்டிக்காட்டுகின்றது.

உயிர்ப்பல்வகைமையினால் உருவான உலகம்

ஓர் இயந்திரமாகும்

ஒவ்வொரு காலப்பகுதியிலும் தோன்றிய விலங்குகள், தாவரங்கள் மற்றும் சுற்றாடல் தொகுதிகள் என்பனவே இந்த காலச் சுருளின் செயற்பாட்டிற்கு பங்களிப்புச் செய்யும் காரணிகளாகும்.இவ்வனைத்தும் ஒன்றுடன் ஒன்று பிணைந்தே இயங்குகின்றன. இதுவோர் இயந்திரம் போன்றது. விலங்குகள், தாவரங்கள் மற்றும் சுற்றாடல் தொகுதிகளின் இயக்கம் சீரவர நிகழாவிட்டால், மோசமான பாதிப்புகள் ஏற்படலாம்.

விலங்குகளின் பாதச்சுவடுகளின்மூலம் காட்டப்படும் உயிர்ப்பல்வகைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் சிறப்பான உயிர்ப்பல்வகைமை நிலவும் பகுதிகள்





வகைகமை

ERSITY

...யிர்ப்பல்வகைமை' (Biodiversity) கருதப்படுகின்
...ும் விலங்குகளை உள்ளடக்கியதாக இந்த உயிர்ப்
...ரினம் முதற்கொண்டு கண்களுக்குப் புலப்படாத
... சமுத்திரம் மற்றும் சேற்றுநிலம் என்பனவும் உயிர்ப்
...யினைப் பாதுகாப்பது என்பது, மனிதனின் எதிர்கால
...டுகள் ச... லைமையிலான பல்வேறு சர்வதேச
...தற்காக, ...க மக்களுக்கு விழிப்புணர்வூட்டும்
...சல்கின்றன.



உயிர்ப்பல்வகைமைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் 05 காரணிகள்

01 இருப்பிடங்களை இழத்தல்

விவசாயத்திற்கு, மீன்பிடிக் கைத்தொழிலுக்கு, தொழிற்சாலை மற்றும் நகர நிர்மாணிப்புக்கு நிலங்களையும் சமுத்திரத்தினையும் பயன்படுத்துதல், நீர்ப்பாசனம் மற்றும் நீர்மின் நிகழ்ச்சித்திட்டம் போன்றவற்றுக்கு ஆறுகளை இடைமறித்து அணைகட்டுதல் போன்றவை காரணமாக அந்தந்த சூழல் தொகுதிகளுக்கான உயிரினங்கள் இருப்பிடங்களை இழக்க நேர்கின்றன.

02 அதிகபட்ச சுரண்டல்

உணவு மற்றும் வேறு நோக்கங்களுக்காக வரையறை இன்றி விலங்குகளையும் தாவரங்களையும் நுகர்வதனால் இந்த நிலைமை ஏற்படுகின்றது. மரத்தளபாட உற்பத்திகளுக்கு தேவையான மூலப்பொருட்களுக்காகவும் மருந்துகள் தயாரிப்புக்காகவும் இவ்வாறு இயற்கை வளங்கள் அழிக்கப்படுகின்றன.

03 சுற்றாடல் மாசடைவு

பிரதானமாக விவசாயத்துறையில் பயன்படுத்தப்படும் ரசாயன உரங்கள், களைக்கொல்லிகள், பூச்சிக்கொல்லிகள் காரணமாகவும் நகர தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் காரணமாகவும், ஏற்படும் சுற்றாடல் மாசடைவு என்பன உயிர்ப்பல்வகைமைக்கு பாதிப்பினை ஏற்படுத்துகின்றன.

04 காலநிலை மாற்றம்

வளிமண்டலத்தில் பச்சைவீட்டு வாயுக்களின் மட்டம் அதிகரிப்பதன் காரணமாக இந்த நிலமை ஏற்படுகின்றது. குறிப்பாக; படிம எரிபொருள் தகனம், காடழிப்பு மற்றும் தொழிற்சாலைகள் அதிகரிப்பு காரணமாக, சுற்றாடலை மாசுபடுத்தும் வாயுக்கள் அதிகளவில் வெளிவிடப்படுகின்றன. இதனால், உலக வெப்பநிலை அதிகரித்து காலநிலை மாற்றங்கள் ஏற்படுகின்றன.

05 ஆக்கிரமிப்பு உயிரினங்கள்

உலகின் ஒரு பகுதியில் இருந்து மற்றொரு பகுதிக்கு பலவந்தமாக ஓர் இனத்தை அறிமுகம் செய்து வைக்கும்போது, அது போட்டியாளராக மாறி அப்பகுதிக்குத் தனித்துவமான இனத்திற்கு எதிரியாக மாறிவிடுகின்றது. இதனாலும் உயிர்ப்பல்வகைமை பாதிப்புக்குள்ளாகின்றது.

Convention on Biological Diversity

1992 ஆம் ஆண்டு பிரேசிலின் ரியோ டி ஜெனைரோ நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி மாநாட்டில் (Rio Earth Summit) உயிர்ப்பல்வகைமை சாசனம் முன்வைக்கப்பட்டது. இதற்காக, ஐக்கிய நாடுகள் சபையின் 150 உறுப்பு நாடுகளின் அனுமதி கிடைத்தது.

2011-2020
United Nations Decade on Biodiversity

ஐக்கிய நாடுகள் சபை 2011ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரையிலான காலத்தினை உயிர்ப்பல்வகைமை ஆண்டாக பெயரிட்டுள்ளது. உலகம் முழுவதும் உயிர்ப் பல்வகைமையினைப் பாதுகாப்பதற்கான வேலைத் திட்டங்கள் இதன்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

-பிரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெப்லர் கண்டுபிடித்த இருண்ட குறுங்கோள்

பூமியைப் போன்ற வேறு கோள்கள் எமது சூரிய குடும்பத்திற்கு அப்பால் உள்ளதா? என்று கண்டறிவதற்காக, நாஸா நிறுவனம் கெப்லர் தொலைக்காட்டியினை விண்வெளிக்கு அனுப்பியுள்ளது. கோள்களைக் கண்டுபிடிக்கும் அதேவேளை, எமது சூரிய குடும்பத்தின் சில மர்மங்களையும் கெப்லர் தொலைக்காட்டி துலக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இருண்ட குறுங்கோள்

2007ஆம் ஆண்டு கெப்லர் தொலைக்காட்டி கண்டுபிடித்த கோள் அந்தஸ்தற்ற குறுங்கோளுக்கு '2007 OR_{10}' என்று விஞ்ஞானிகள் பெயரிட்டுள்ளனர். எமது சூரிய குடும்பத்தில் உள்ள கோள் அந்தஸ்தற்ற குறுங்கோள்களில், இது மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளது. அதுமட்டுமன்றி, முன்னர் கருதியவைவிட இது அளவில் மிகவும் பெரியது என்றும் இதுவரை கிடைத்துள்ள தரவுகளுக்கமைய உறுதியாகியுள்ளது. மேலும், இந்த குறுங்கோளானது மர்மங்கள் நிறைந்த ஒரு குறுங்கோளாகவும் கருதப்படுகின்றது. இந்த மர்மங்களை நாஸா விஞ்ஞானிகள் படிப்படியாக துலக்கி வருகின்றனர்.

கண்டுபிடிப்பு

மெக் ஷ்வப் மற்றும் மைக்கல் பிறவுன் ஆகிய பட்டதாரிகள் இருவரே, இந்த குறுங்கோளைக் கண்டுபிடித்துள்ளனர். இக்கண்டுபிடிப்பின்போது, இந்த குறுங்கோளானது, பார்வைக்கு மிகவும் பெரிதாகவும், வெண்ணிறத்திலும் இருந்துள்ளது. இதனால், 2007 OR_{10} குறுங்கோளானது, 'ஸ்னோ வைட்' என்று அழைக்கப்பட்டது. எனினும், அண்மையில் வெளியாகிய தகவல்களின்படி, இதுவோர் இருண்ட குறுங்கோளாகும் எனத் தெரியவந்துள்ளது. ஏனைய குறுங்கோள்களைவிட, இது மிகவும் மெதுவாகவே சூரியனை சுற்றி வருகின்றது. இதன் சுற்றளவு 1,535 கிலோமீற்றராகும். 2007 OR_{10} குறுங்கோளானது, அதன் அளவில் மற்றுமொரு குறுங்கோளான 'மேக்மேக்' இனைவிட முன்னிலை வகிப்பதாக கூறப்படுகின்றது. புளூட்டோ, 2007 OR_{10}, மேக்மேக், ஹோமியா மற்றும் ஏரிஸ் என்பன எமது சூரிய குடும்பத்தில் உள்ள ஏனைய குறுங்கோள்கள் ஆகும்.

வாழ்வதற்கான தகுதி

எமது சூரிய குடும்பம் உள்ளடங்குகின்ற பால்வெளியில், கோள்கள் பில்லியன் கணக்கில் உள்ளன. ஆறாண்டு களாக விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்வுகளை அடுத்தே, இந்த தகவல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வானியல் அறிஞர்கள் ஆறு ஆண்டுகளாக நட்சத்திரங்கள் பற்றி மேற்கொண்ட நுணுக்கமான ஆய்வுகளில், மனிதன் வாழத் தகுதி மிக்க கோள்கள் பலவும் பால்வெளியில் பரவலாக உள்ளன என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

ஆராய்ந்து பெறப்பட்ட தரவுகள்

கெப்லர் விண்வெளி ஆய்வு நடவடிக்கையின் மூலம் பெறப்படும் தரவுகளை ஆய்வு செய்த அமெரிக்காவின் சந்தியாகோ பல்கலைக்கழகத்தின் வானியல் அறிஞர்கள், இரண்டு நட்சத்திரங்களை (சூரியன்களை) சுற்றி வரும் புதிய சூரிய குடும்பங்கள் இரண்டினைக் கண்டுபிடித்துள்ளதாக அறிவித்துள்ளனர். அத்துடன், இவற்றிற்குரிய கோள்கள் அனைத்தும் ஒரே தடவையில் இரண்டு சூரியன்களையும் சுற்றி வருகின்றன என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

-(பீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்வெளிப் பயணத்திற்காக இந்தியாவிலிருந்து ஒரு விண்கலம்

இந்தியாவின் விண்வெளி நடவடிக்கைகள் யாவும் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தினாலேயே (ISRO - Indian Space Research Organistation) மேற்கொள்ளப்படுகின்றது. 1969 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த நிறுவனத்தின்கீழ், இந்திய விண்வெளித் துறை பல வெற்றிகளைக் கண்டுள்ளது. அந்த வரிசையில், கடந்த மே மாதமும் இந்திய விண்வெளித் துறை மற்றுமொரு சாதனையை நிகழ்த்தியது. அதுதான் விண்வெளிப் பயணத்திற்காக விண்கலம் ஒன்றை தயாரித்து-அதை வெற்றிகரமாக பரீட்சித்துப் பார்த்தமையாகும்.

இந்த விண்கலத்தை தயாரிக்க ஐந்து வருடங்கள் செலவாகின. இது முற்றிலும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட விண்கலமாகும். இதற்கு சுமார் 600 இற்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் தமது பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

விண்கல செயல்திட்டங்கள்

விண்வெளி வீரர்கள் மற்றும் பொருட்களை சர்வதேச விண்வெளி நிலையத்திற்குக் கொண்டு செல்லவும், மீண்டும் புவிக்குக் கொண்டுவரவும் விண் கலங்கள் பயன்படுத்தப்படுகின்றன. உலகில் மிகவும் பிரபலமான விண்கல செயல்திட்டங்களை அமெரிக்காவின் நாஸா நிறுவனமே மேற்கொண்டிருந்தது. சுமார் 30 வருடங்களாக அமுலில் இருந்த இந்த விண்கல செயல்திட்டங்கள் இற்றைக்கு சில வருடங்களுக்கு முன்னர் முடிவுக்கு வந்தன. அதனையடுத்து, அந்த விண்கலங்கள் அனைத்திற்கும் ஓய்வு கொடுப்பதற்கு அமெரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது.

இந்தியாவின் விண்கலம்

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இந்த விண்கலமானது,அண்மையில் அந்நாட்டின் கேரள மாநிலத்தின் சிறிய மீன்பிடிக் கிராமமொன்றிற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள விமான தரிப்பிடப் பிரிவில் வைத்தே உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

6.5 மீற்றர் நீளமான இந்த விண்கலம், 1.75 தொன் நிறை கொண்டது. இந்த விண்கலத்தை தயாரிக்க 95 கோடி இந்திய ரூபாய்கள் செலவாகியுள்ளன. அத்துடன், இந்த விண்கலம் இன்னும் பரீட்சார்த்த நிலையிலேயே உருவாக்கப்பட்டு வருகின்றது. பரீட்சார்த்த மட்டத்திலிருந்த விண்கலமே, கடந்த மே 23 ஆம் திகதி இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ரொக்கெட் ஒன்றின் உதவியுடன் வெற்றிகரமாக விண்வெளிக்கு அனுப்பப்பட்டது. இந்த விண்கலம் வர்த்தக ரீதியாக 2030 இல் பயன்படுத்தப்படும் எனக் கூறப்படுகிறது.

செலவினம் குறைக்கப்படல்

அமெரிக்காவில் விண்கல செயல்திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதற்கு முன்னர், விண்வெளி நடவடிக்கைகளுக்காக ரொக்கெட்களே பயன்படுத்தப்பட்டன. மேலும், பிற்காலத்தில் அந்த ரொக்கெட் டையும் அதன்மூலம் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட விண்கலத்தையும் ஒரே ஒரு முறை மாத்திரமே பயன்படுத்தக்கூடியதாக இருந்தது. அதன் பின்னர் அவை குப்பைகளாக எறியப்பட்டன.

இந்தியாவும்கூட ஆரம்பத்தில் அதன் விண்கல செயல்திட்டத்தை இவ்வாறே ஆரம்பித்தது. எனினும், காலப்போக்கில் உலகில் ஏற்பட்ட தொழில்நுட்ப முன்னேற்றம் காரணமாக விண்கலங்களும் ரொக்கெட்களும் மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டன. இதனால், விண்வெளி நடவடிக்கைகளுக்கான செலவினம் 90 சதவீதத்தால் குறைந்துள்ளது.

(-ஜெ)

Digitized by Noolaham Foundation

ආයුබෝවන්
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் மாலா-ராணி ஆகியோருக்கு இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

මාලා: රාණී, ලබන මාසේ රචනා තරඟය නේද?
ராணி, லபன மாசே ரச்சனா தரங்கய நேத?
மாலா: **ராணி, வருகிற மாதம் கட்டுரைப் போட்டி அல்லவா?**

රාණී: ඔව් මාලා. ඔයත් රචනා තරඟයට සහභාගී වෙනවාද?
ஒவ் மாலா. ஒயத் ரச்சனா தரங்கயட்ட சஹபாகி வெனவாத?
ராணி: **ஆம் மாலா. நீங்களும் கட்டுரைப் போட்டியில் கலந்துகொள்கிறீர்களா?**

මාලා: ඔව්. මට නම් බයයි රාණී.
ஒவ். மட்ட நம் பயய் ராணி.
மாலா: **ஆம். எனக்கென்றால் பயம் ராணி.**

රාණී: මටත් එහෙම තමා.
மட்டத் எஹெம தமா.
ராணி: **எனக்கும் அப்படித்தான்.**

මාලා: සිංහල ටීචර් නම් රචනා ලියන්න කියලා දෙන්නම් කිවුවා.
சிங்ஹல டீச்சர் நம் ரச்சனா லியன்ன கியலா தென்னம் கிவ்வா.
மாலா: **சிங்கள டீச்சர் என்றால் கட்டுரை எழுதச் சொல்லித் தருவதாகக் கூறினார்.**

රාණී: පාසල් වෙලාවේ කියල දෙන්න බැහැනේ.
பாசல் வெலாவே கியல தென்ன பெஹெனே.
ராணி: **பாடசாலை நேரத்தில் சொல்லித்தர முடியாதுதானே.**

මාලා: ඔව්. පාසල් වෙලාවෙන් පස්සේ ටීචර් කියලා දෙන්නම් කිවුවා.
ஒவ். பாசல் வெலாவென் பஸ்ஸே டீச்சர் கியலா தென்னம் கிவ்வா.
மாலா: **ஆம். பாடசாலை நேரத்தின் பின்னர் சொல்லித் தருவதாக டீச்சர் சொன்னார்.**

රාණී: කවදද කියල කිව්වාද?
கவதத கியல கிவ்வாத?
ராணி: **எப்போதென்று சொன்னாரா?**

මාලා: තවම නැහැ. අපි ටීචර් ගෙන් අහමු.
தவம நெஹெ. அப்பி டீச்சர் கென் அஹமு.
மாலா: **இன்னும் இல்லை. நாங்கள் டீச்சரிடம் கேட்போம்.**

රාණී: සිංහල ටීචර් හරිම හොඳයි නේද?
சிங்ஹல டீச்சர் ஹரிம ஹொந்தய் நேத?
ராணி: **சிங்கள டீச்சர் மிகவும் நல்லம்தானே?**

මාලා: ඔව් රාණී. එයා නිසා තමා සිංහල ඉගෙන ගන්නත් ආසා.
ஒவ் ராணி. எயா நிசா தமா சிங்ஹல இகென கன்னத் ஆசா.
மாலா: **ஆம் ராணி. அவரால்தான் சிங்களம் படிக்கவும் விருப்பம்.**



பயிற்சி

சிங்களத்தில் மொழிபெயர்க்க.

1. எனக்கென்றால் பயம்.
....
2. டீச்சரிடம் கேட்போம்.
....
3. சிங்களம் படிக்க விருப்பம்.
....

தன் கூற்று வாக்கியம் - பிறர் கூற்று வாக்கியம்
Direct speech & Indirect speech

இதுவரையிலும், தன் கூற்று மற்றும் பிறர் கூற்று வாக்கியங்களின் 'உடன்பாடு' நிலையில் உள்ள வாக்கியங்கள் பற்றிக் கற்றோம் அல்லவா? இனி, அவற்றின் 'எதிர்மறை' நிலையில் உள்ள வாக்கியங்கள் பற்றிப் பயில்வோம்.

அ) The principal said to the teacher, "don't come late."
அதிபர் ஆசிரியரிடம் கூறினார், "தாமதமாக வராதீர்" என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஆ) The principal told the teacher not to come late.
அதிபர் ஆசிரியரை தாமதமாக வர வேண்டாமெனக் கூறினார்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

★ "Don't come late" - Direct speech (Negative)
"தாமதமாக வராதீர்" - தன் கூற்று (எதிர்மறை)

★ not to come late - Indirect speech (Negative)
தாமதமாக வர வேண்டாமென - பிறர் கூற்று (எதிர்மறை)

இ) Father said to his son, "Don't eat too much."
தந்தை தனது மகனிடம் கூறினார், "அதிகமாகச் சாப்பிடாதே" என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஈ) Father told his son not to eat too much.
தந்தை தனது மகனை அதிகமாகச் சாப்பிட வேண்டாமெனக் கூறினார்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

★ "Don't eat too much" - Direct speech (Negative)
"அதிகமாகச் சாப்பிடாதே" - தன் கூற்று (எதிர்மறை)

★ not to eat too much - Indirect speech (Negative)
அதிகமாகச் சாப்பிட வேண்டாமென - பிறர் கூற்று (எதிர்மறை)

உ) The teacher said to Ravi, "Don't waste the time."
ஆசிரியர் ரவியிடம் கூறினார், "நேரத்தை வீணாக்காதே" என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஊ) The teacher told Ravi not to waste the time.
ஆசிரியர் ரவியை நேரத்தை வீணாக்க வேண்டாமெனக் கூறினார்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

★ "Don't wast the time" - Direct speech (Negative)
"நேரத்தை வீணாக்காதே" - தன் கூற்று (எதிர்மறை)

★ not to waste the time - Indirect speech (Negative)
நேரத்தை வீணாக்க வேண்டாமென - பிறர் கூற்று (எதிர்மறை)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜுஜுப்ஸ்களினால் கட்டடம் அமைப்போம்





கட்டட நிர்மாணப் பணிகளைப் பார்க்கும்போது அது எந்தளவு கடினமான தொரு வேலை என நாம் கருதுவோம். ஆனால், நாம் இங்கு நிர்மாணிக்கப்போகும் கட்டடம் மிகவும் இலகுவானது; சுவை மிக்கது. வாருங்கள், அதை செய்துதான் பார்ப்போமே...

தேவையானவை:

★ ஜுஜுப்ஸ் (இவை சரியான வடிவங்களில் உறுதியானவையாக இருக்க வேண் டும். சிறிய பந்து வடிவிலான ஜுஜுப்ஸ்கள் உகந்தவை)

குறிப்பு: ஜுஜுப்ஸ்களுக்குப் பதிலாக 'க்ளே' (Clay) இனையும் பயன்படுத்தலாம்.

★ டூத்பிக் பெக்கெட் ஒன்று. (நிர்மாணிப்புத் தேவைக்கேற்ப அளவுகள் வேறுபடும்)

இவ்வாறு செய்வோம்



இப்பொழுது நாம் ஜுஜுப்ஸ் மற்றும் டூத்பிக்குகளைப் பயன்படுத்தி கட்டடம் ஒன்றை நிர்மாணிக்கப் போகின்றோம். இந்த கட்டட நிர்மாணிப்புக்காக முதலில் ஜுஜுப்ஸ்களினால் அத்திவாரம் இட்டுக்கொள்ளுங்கள். டூத்பிக்குகளைப் பயன்படுத்தியே இந்த கட்டடம் அமைக்கப்படவுள்ளதனால், டூத்பிக் ஒன்று அல்லது இரண்டு இணையும் எல்லா இடங்களிலும் ஜுஜுப்ஸ் வைக்கப்படல் வேண்டும்.

இங்கு ஜுஜுப்ஸ்கள் கட்டடத்தின் பிரதான தூணாக செயற்படும். ஆனால், நீங்கள் விரும்பின் கட்டடத்திற்குப் பதிலாக பலவிதமான பாலங்களையும் நிர்மாணிக்கலாம்.

கட்டட நிர்மாணப் பணி

கட்டடம் ஒன்றினை நிர்மாணிக்கும்போது, அதிலிருந்து வெப்பம், காற்று, வெளிச்சம், ஈரளிப்பு என்பன பயணிக்கும் வழிமுறைகள் குறித்து பொறியியலாளர்கள் அக்கறை காட்டுவர். கட்டட நிர்மாணத்தின் போது, பொறியியலாளர்களே, கணித மற்றும் விஞ்ஞான அறிவினைப் பயன்படுத்தி பிரயோக ரீதியிலான சிக்கல்களைத் தீர்க்கின்றனர்.

உங்கள் அபிமான

தமிழ்Mirror

திங்கள் முதல் வெள்ளிவரை

விலை Rs. 10/=

தினசரி தேசிய பத்திரிகையாக

வெளிவருகிறது

wijeyanewspapers helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ்Mirror www.tamilmirror.lk

விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு

noolaham.org | aavanaham.org

உலகில் பிரபல்யமானவர்கள்

பிரீட்ரிக் ஹெகல்

தென்மேற்கு ஜேர்மனியின் வூட்டம்பேர்க்கில் உள்ள டியூச்சே எனும் இடத்தில் வாழ்ந்த ஜோர்ஜ் லூட்விக்-மரியா மக்தலேனா லூயிசா தம்பதிகளுக்கு 1770 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி பிரீட்ரிக் ஹெகல் பிறந்தார்.

தமது ஆரம்பக் கல்வியை ஸ்ட்யூகார்ட் கல்விக்கூடத்தில் பெற்றுக்கொண்ட இவர் தமது, 18 ஆவது வயதில் ட்யூபின்ஜென் பல்கலைக்கழகத்தின் இறையியல் நிறுவனத்தில் பயின்றார். இலத்தீன், கிரேக்க மொழிகளில் மிகச் சிறந்த தேர்ச்சி பெற்று தமது 20 ஆவது வயதில் மெய்யியலில் முதுகலைக் கலைப்பட்டத்தைப் (M.A) பெற்றார்.

இவர் கருத்துக்கள் அதிகமாக எழுவதையும் அவை 'வளர்ச்சி' அடைவதையும், எதிர்-எதிர் கருத்துக்கள் எழுந்து விரிவான வளர்ச்சி அடைவதையும் சுட்டிக் காட்டியிருந்தார். இவ்வகை விரிவான கருத்து மோதலினால் ஏற்படும் வளர்ச்சியை 'டயலெக்டிக்'(dialectic) என்று மேற்குலகில் குறிப்பிடுகின்றனர்.

ஹெகல் முக்கியமான நான்கு நூல்களையும் வெளியிட்டுள்ளார். அவற்றில் 1807 இல் வெளியிடப்பட்ட உள்ளத்தின் நிகழ் வியக்கம் (phenomenology of Spirit or Phenomenology of Mind) என்னும் நூலில் புலனறிவில் இருந்து எப்படி உள்ளுணர்வும், உள்ளறிவும் எழுகின்றது என்பதை விளக்கினார். உள்ளுணர்வு நிலைகளில் உள்ள பல்வேறு வடிவங்களையும் நிலைகளைப் பற்றியும் அறவொழுக்கக் கொள்கை நிலைகள் பற்றியும் இவர் திறம்பட விளக்கியுள்ளார்.

மேலும், 1811 இல் மூன்று தொகுதிகளாக விஞ்ஞான அளவையியல் (Science of Logic) என்னும் நூலை வெளியிட்டார். அதனை தொடர்ந்து 1811-1812 ஆம் ஆண்டுகளிலும், பின்னர் 1816 ஆம் ஆண்டிலும் (திருத்தப்பட்ட பதிப்பாக 1831 இல்) தன்னுடைய முழு மெய்யியல் கருத்துக்களையும் தொகுத்து மெய்யியல்களின் கலைக் களஞ்சியம் என்னும் நூலாக வெளியிட்டார்.

இறுதியாக 1822 இல் தன்னுடைய அரசியல் சமூகவியல் பற்றிய கருத்துக்களை செவ்வழியின் மெய்யியல் அடிப்படைக் கருத்துக்கள் என்னும் நூலாக வெளியிட்டார். இத்தகைய பெருமைகள் நிறைந்த பிரீட்ரிக் ஹெகல் அவர்கள் 1831 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 14 ஆம் திகதி இவ்வுலகை விட்டு நீங்கினார்.

தொகுப்பு:
ஜுனைட். எம்.பஹீத்

குடும்பமே பயணிக்கும் சைக்கிள்

படத்தை நன்றாக உற்றுப் பாருங்கள். சைக்கிளுடன் தையல் இயந்திரமும் இருப்பதைக் காண்பீர்கள். இந்த தையல் இயந்திரத்துடன் கூடிய குடும்பமே பயணிக்கும் இத்தகைய சைக்கிளை கண்டுபிடித்தவர் சார்ள்ஸ் ஸ்டீலெஃப் என்பவராவார். அவரது குடும்பம்தான் இந்த சைக்கிளில் பயணிப்பதைப் படத்தில் காண்கிறீர்கள். Goofy Bike எனப்படும் இந்த சைக்கிளை இவர் 1939 ஆம் ஆண்டில் கண்டுபிடித்தார்.

ஏன்? எப்படி?

கேள்வி:- உடலுக்கு உடற்பயிற்சி அவசியம். ஆனால், முறையற்ற உடற்பயிற்சியானது, எப்படி உடலுக்கு ஆபத்தினை ஏற்படுத்தும்?

பதில்:- நாம் உட்கொள்ளும் மாச்சத்து, கொழுப்பு உணவுகள் மேலதிகமாக உடலில் சேர்ந்து கொழுப்பாக மாறி விடுகின்றது. இதனால், உடற்பருமனும் அதிகரித்து இதயநோய்கள், நீரிழிவு நோய்கள் ஏற்படக் கூடும். எனவே, உடற்பயிற்சி உடலுக்கு அத்தியாவசியமாகும். ஆனால் முறையற்ற, வயதுக்கு பொருத்தமற்ற உடற்பயிற்சிகள் காரணமாக, மூட்டுக்கள் தேய்வடைந்து, தசை நார்களில் சேதத்தினை ஏற்படுத்தும் என்பதால் முறையற்ற உடற்பயிற்சியை மேற்கொள்வது தவிர்க்கப்பட வேண்டும் என வைத்தியர்கள் அறிவுறுத்துகின்றனர்.

கேள்வி:- 'டையுரெட்டிக்ஸ்' என்ற இரசாயனம் போட்டிகளில் பங்குபற்றும் விளையாட்டு வீரர்களுக்கு தடை செய்யப்பட்டுள்ளது. அது ஏன்?

பதில்:- இரத்தத்தில் உள்ள நீரினை வெளியேற்றுவதே இந்த இரசாயனத்தின் தொழிற்பாடாகும். போட்டியில் வெற்றி பெறுவதற்கு உத்வேக மருந்துகளை உட்கொள்ளும்போது, அதன் ஒரு பகுதி சிறுநீரில் சேர்கின்றது. இதேவேளை, டையுரெட்டிக்ஸ் உட்கொள்ளப்பட்டதும் அதிகளவு சிறுநீர் வெளியேறுவதனால் சிறுநீர் மாதிரியினைப் பரிசோதிக்கும்போது, உத்வேக மருந்து ஏதேனும் உட்கொள்ளப்பட்டமைக்கான எவ்வித அறிகுறியும் உடலில் அறிய முடிவதில்லை. இதனால் தான் டையுரெட்டிக்ஸ் தடை செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைவெளிகளை நிரப்புக



வட்டத்தினுள் இருக்கும் எழுத்துக்களைப் பயன்படுத்தி குறைந்தது 10 சொற்களை யேனும் எழுதுங்கள்.



நிழற்றப்பட்டுள்ள பகுதியை பின்னத்தில் தருக



அறிவுக்கு விருந்து (08.06.2016) விடைகள்





log	i	h	c	n	a	r	b	c	q
skate	v	g	y	h	m	t	x	g	c
roller	c	s	c	z	k	s	b	o	d
hammer	h	a	m	m	e	r	o	l	f
branch	z	e	x	s	k	a	t	e	m
kitchen	i	r	o	l	l	e	r	z	p
balloon	k	i	t	c	h	e	n	n	o
dinosaur	k	n	o	o	l	l	a	b	s
	d	i	n	o	s	a	u	r	k

7 A படத்தை அவதானித்து, B படத்திலுள்ள வித்தியாசங்களில் X அடையாளமிடுக

குறுக்கெழுத்துப் போட்டி: 193



மேலிருந்து கீழ்

01. செருக்கு.
02. கதவைப் பூட்ட, திறக்கத் தேவை.
04. மரம்.
05. இது சீறும். (மாறியுள்ளது)
06. உலகம். (தலைகீழ்)
07. யானை கட்டும் இடம்.
07. புரதம் அதிகமுள்ள ஓர் உணவு வகை. (குழம்பியுள்ளது)
08. வெற்றிலை, பாக்கு. (தலைகீழ்)
09. மகள்.

இடமிருந்து வலம்

01. 'இது' என்பதன் பன்மை.
02. சோறு.
03. மணிமேகலையின் தாய்.

குறுக்கெழுத்துப் போட்டி: 192 விடைகள்

1உ	2ப	க	ர	ண	ம்
3ப	ல	ம்		வ	
யோ		க்		ன்	
4க	ற்	க	ட	5க	ம்
ம்	று	6பு	7கு		ழ
	8நா		ம்	க	9மு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பள்ளிப்போருவ-ஹெம்மாதகமையைச் சேர்ந்த மொஹமட் பஹீம் - பாத்திமா ஸஹாரா தம்பதியரின் செல்வப் புதல்வன் மொகமட் ஸனாஃப், தனது மூன்றாவது பிறந்தநாளை 21.06.2016 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

விஜய் 'விழா உலா' த.பெ. எண் 2037 கொழும்பு

ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புதிய பாலமுனை முகைதீன்ஸ் பாலர் பாடசாலையின் 2016 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழா, அண்மையில் பாலர் பாடசாலையின் தலைவர் மௌலவி ஜே.எம்.றமீஸ் ஹாமி தலைமையில் இடம்பெற்றது. இதன்போது, சிறுவர்களின் ஆற்றல்களை பிரதிபலிக்கும் வகையிலான போட்டிகளும் நிகழ்வுகளும் இடம்பெற்றன. போட்டிகளில் பங்குபற்றிய சிறுவர்களுக்கு அதிதிகளினால் விருதுகளும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மன்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமஷிவாயம், கௌரவ அதிதியாக ஆரையம்பதி பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் புஷ்பலதா உட்பட, மேலும் பல பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

(தகவல்: பழுலுல்லாஹ் பர்ஹான்)

கற்றலும் அவதானிப்பும்

கற்றலில் அவதானிப்பு மிக முக்கிய விடயமாகவே காணப்படுகின்றது. மிக உன்னிப்பான அவதானிப்பானது, கற்றல் விடயங்களை இலகுவாக்கவும், விடயங்கள் மனதில் இலகுவாகப் பதிவதற்கும் ஏதுவாகின்றது.

கூர்மையான அவதானிப்புக்கு குறித்த விடயம் தொடர்பான ஆர்வம், விருப்பம் என்பனவும் அவசியமாகின்றது. இது கற்றல் மற்றும் ஏனைய விடயங்களுக்கும் பொருந்தும்.

எனினும், கற்றல் தொடர்பில் அவதானிப்பானது, கல்வியில் மிகப் பெரும் முன்னேற்றங்களை ஏற்படுத்திவிடுகின்றது. அதற்கமைவாக, கல்வி தொடர்பில் ஏற்படும் குழப்பங்கள், விளக்கம் இன்மை மற்றும் கடினத்தன்மைகளை தீர்ப்பதில் முன்னிற்கின்றது. அவ்வாறே, கற்றலையும் மிக மிக இலகுவாக்கி விடுகின்றது.

இதேவேளை, அவதானிப்பு இன்மை மற்றும் கவனச் சிதறல்கள் என்பன மன அழுத்தம், அக்கறை இன்மை, தேவையற்ற சிந்தனைகள், அமைதியற்ற சூழல் மற்றும் விடயங்கள் தொடர்பான விருப்பம் இன்மை போன்ற காரணிகளினால் ஏற்படுகின்றது.



கற்றலில் கூர்மையான அவதானிப்பு என்பது மாணவர்களை உயர்வடையச் செய்வதுடன், கவனச் சிதறல் மற்றும் கவனிப்பு இன்மை என்பன கற்றல் செயற்பாடுகளில் அவர்களை தாழ்நிலைக்கே இட்டுச் செல்கின்றன.

எஸ்.கலைவாஸன்,
கலுகல்ல தமிழ் வித்., புஸ்ஸல்லாவ.

அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு

ஆர்.தயாளினி,
அப்புத்தளை த.ம.வித்.,
அப்புத்தளை.

ம.ஹனிஸ்ரா,
நெளுக்குளம் கலைமகள் ம.வித்.,
வவுனியா.

கே.துஷிந்தா,
ஊவா விஞ்ஞானக் கல்.,
பதுளை.

எஸ்.அப்துல்லாஹ்,
காத்தான்குடி ம.கல்., (தே.பா)
காத்தான்குடி.

ஜெ.நிஸ்மா பானு,
பொலன்னறுவை மு.ம.கல்.,
பொலன்னறுவை.

எஸ்.ஷஹீமா,
கிரிந்தை மு.ம.வித்.,
கிரிந்தை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இவ்வாறு படிக்கப் பழகிக்கொள்ளுங்கள்



பாடசாலையில் பாடங்களை ஒழுங்குமுறையுடன் கற்பதற்கும் வெற்றிகரமாக கல்விப் பயணத்தை மேற்கொள்வதற்கும் ஒரு சில ஆலோசனைகள் இதோ!

சிறந்த முறையில் வாசியுங்கள்

பாடசாலையில் ஆசிரியர் கற்பிப்பதற்கும் மேலதிகமாக உங்கள் அறிவினை வளர்த்துக் கொள்வது அவசியமாகும். இதற்காக நீங்கள் பாடப் புத்தகங்கள் தவிர்ந்த புத்தகங்களையும் தேடிப்படிப்பது அவசியமாகும். இதன்மூலம் உங்கள் வாசிப்பாற்றல், எழுத்து ஆற்றல் மற்றும் செவிமடுக்கும் ஆற்றல் என்பன உங்கள் கல்வியை முழுமைப்படுத்த முடியும்.

வாசிப்பிற்கான பொருத்தமான இடம்

நீங்கள் வாசிக்கும் ஒவ்வொரு விடயங்கள் குறித்தும் அவதானமாக இருங்கள். நீங்கள் வீட்டில் வாசித்துக் கொண்டிருக்கும் போது மற்றவர்களின் பேச்சு சத்தம், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் சத்தம், தொலைபேசி மணி அழைப்பு முதலிய சத்தங்கள் உங்களுக்கு கேட்கின்றதாயின் இவை உங்கள் வாசிப்புக்கு இடையூறாக அமையும். இவ்வாறான இடையூறுகள் ஏற்படாது இருக்க அறைக்குள் சென்று கதவை சாத்தி விட்டு வாசியுங்கள்.

பாடத்தின் பிரதான அம்சங்களை முதலில் வாசியுங்கள்

நீங்கள் வாசிக்கவேண்டிய பாடத்தின் அல்லது குறிப்பின் பிரதான தலைப்பு, முக்கிய அம்சங்களை முதலில் வாசித்து விளங்கிக்

கொள்ளுங்கள். இவ்வாறு செய்வதன் மூலம் உங்களுக்கு வாசிக்கும் பகுதியிலுள்ள முக்கியமான விடயங்கள், விபரங்கள் பற்றி நன்கு நினைவில் வைத்துக்கொள்ள முடியும்.

சொல்லுக்கு சொல் வாசிக்காதீர்

சிலர் சொல்லுக்கு சொல் வாசித்துக் கொண்டிருப்பர். இவ்வாறு வாசித்துப் பழகாதீர்கள். இது பயன்மிக்க வாசிப்பு அல்ல. வசனங்களை சேர்த்து வாசியுங்கள். ஒரு விடயத்தினை வாசிக்கும் போது ஒரு சில வார்த்தைகள் உங்கள் கவனத்தினைப் பெறும்.

உதவி உபகரணத்தினைப் பயன்படுத்துங்கள்

நீங்கள் வாசிக்கும்போது, உதவிக்கு பேனா அல்லது பென்சிலை வைத்துக்கொள்ளுங்கள். இவ்வாறு செய்யும்போது, உங்கள் மூளையில் வார்த்தைகள் பதிவா கின்றன என்பதனையும் நினைவில் கொள்ளுங்கள்.

கண்களுக்கு களைப்பு வேண்டாம்

நீங்கள் வாசிக்கும் போது, அறையின் வெளிச்சம் சீராக இல்லை என்றாலும் கண்கள் விரைவாக களைப்படைந்து விடுகின்றன. வாசிக்கும் புத்தகத்தினை வசதியாக வைத்து வாசிக்கப் பழகுங்கள். படுத்துக் கொண்டு வாசிப்பதனால் கண்கள் களைப்படைவதுடன், வாசிப்பு செயற்பாடு ஒழுங்காக நடைபெற மாட்டாது.

முக்கிய சொற்களை கவனியுங்கள்

எப்பொழுதும் வாக்கியத்தில் உள்ள பிரதான வாக்கியங்கள் மீது உங்கள் அவதானத்தினை செலுத்துங்கள். வாக்கியத்தின் இடையில் வரும் உடன், போன்ற, அத்துடன் ஆகிய சொற்களை விரைவாக வாசியுங்கள். இவ்வாறு வாசிப்பதன் மூலம் உங்கள் வாசிப்பின் வேகத்தினை சம மட்டத்தில் வைத்திருக்க முடியும்.

கற்றுக்கொள்வதன் முக்கியத்துவம்

கற்றுக்கொள்வதன் அடிப்படை அம்சம் வாசித்தல் ஆகும். அதனால், சரியாக வாசித்துப் பழகுங்கள். நீங்கள் சரியாக வாசிக்கப் பழகுவீர்களாயின் பரீட்சையில் உங்களால் சிறந்த பெறுபேற்றினை நிச்சயம் பெற முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் மாணவர் கழகம்

அங்.இல: 6167
ச.வினுஜா,
குடியிருப்பு கலைமகள் வித்.,
செங்கலடி.

அங்.இல: 6168
எஸ்.சர்மிலா,
கிளி/இந்து கல்.,
கிளிநொச்சி.

அங்.இல: 6169
ஸ்ரீ.லக்ஸ்மன்,
அம்பனை மேற்கு,
சுன்னாகம்.

அங்.இல: 6170
எ.பிரணீதன்,
வட்டவளை தமிழ் வித்.,
ஹட்டன்.

அங்.இல: 6171
எம்.பிரவீன்,
கோட்லோஜ் த.வித்.,
நுவரெலியா.

இலங்கையின் தமிழ் சான்றோர்கள்

நவாலியூர் க.சோமசுந்தரப் புலவர்

இலங்கையின் 'தங்கத் தாத்தா' என அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டவர் தான் சோமசுந்தரப் புலவர் ஆவார். இவர் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நவாலியூர் எனும் சிற்றூரில் கதிர்காமர்-இலக்குமிப்பிள்ளை தம்பதிகளுக்கு மகனாக 1878 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 25 ஆம் திகதி பிறந்தார்.

இவர், நவாலியூர் அருணாசல உபாத்தியாயர் என்பவரிடம் தமிழ், இலக்கண இலக்கியங்களையும் இராமலிங்கம் உபாத்தியாயர் என்பவரிடம் ஆங்கிலத்தையும் கற்றுத் தேர்ந்தார்.

அட்டகிரி முருகன் பதிகம், அட்டகிரி முருகன் திருவூஞ்சல், சாவித்திரி கதை, பசுவின் கதை முதலிய நூல்களை இளம் பருவத்திலேயே எழுத ஆரம்பித்தார். இவர் கலம்பகம், நான்மணி மாலை, அட்டகம் அந்தாதி, சிலேடை வெண்பா, திருப்பள்ளி யெழுச்சி ஆகிய பிரபந்த வகைகளைப் பாடியுள்ளார்.

இவர், சைவத் தலங்களை மையமாகக் கொண்டு அட்டகிரிக் கலம்பகம், தில்லை அந்தாதி, கதிரைச் சிலேடை வெண்பா முதலிய பிரபந்தங் களையும் பாடியுள்ளார்.

இவர் ஏறக்குறைய பதினைந்தாயிரம் செய்யுள்களை இயற்றியுள்ளமை குறிப்பிடத் தக்கது. இவரின் பல செய்யுள்கள் பலராலும் படித் தறியக்கூடிய எளிய முறையில் அமைந்துள்ளமையால் வரவேற்பைப் பெற்றுள்ளது. யாழ் மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைக்கப்பட்ட 'பனை' மரத்தைக் கருப்பொருளாகக் கொண்டு நானூற்றுக்கும் மேற்பட்ட அடிகளைக் கொண்ட கலி வெண்பா வகையைச் சேர்ந்த இவரது 'இலங்கை வளமும் தால விலாசமும்' எனும் நூல் தமிழ் மக்களிடையே பெரிதும் போற்றப்பட்ட நூலாகத் திகழ்ந்தது.

தமிழ் மொழிக்கு பெரிதும் சேவையாற்றிய சோமசுந்தரப் புலவர் 1953 ஆம் ஆண்டு ஆனி மாதம் 10 ஆம் திகதி இவ்வுலகை விட்டு நீங்கினார்.

டியூனீசியா

வட ஆபிரிக்காவில் அமைந்துள்ள இந்நாடு 1881 இல் பிரான்சின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து 1956 இல் சுதந்திரமடைந்ததோடு 1957 ஆம் ஆண்டளவில் முடியாட்சியில் இருந்து நீங்கி, தற்போது ஜனநாயகத்துடனான இஸ்லாமிய நாடாகவுள்ளது.

ஃபினீஷியர்களே இங்கு முதன்முதலில் குடியேறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரஜாவுரிமையின் பெறுமதியை கண்ணுற்ற உரோமப் பேரரசன்

கரகல்லா

உரோமில் வாழ்ந்த பேரரசர்களிடையே ஒரு கொடூரமான பாத்திரமாக கரகல்லா வரலாற்றில் திகழ்கின்றான். குறிப்பாக, தனது ஆட்சிக் காலத்தில் அவன் மேற்கொண்ட பல சட்டவிரோத செயல்களும் தந்தைக்குப் பின் தனக்குக் கிடைத்த அரசாட்சியை உறுதிசெய்துகொள்வதற்காக தனது சகோதரனையே கொலைசெய்தமையும் வரலாற்று சான்றுகளாகும். இவன் கி.பி 196 இல் சீஸர் என்றும் கி.பி 197 இல் ஒகஸ்டஸ் என்றும் தன் பெயரை பல சந்தர்ப்பங்களில் மாற்றிக்கொண்டான். காலப்போக்கில். உரோமிலும் துருக்கி, லெபனானிலும் உரோமக் கட்டடங்களை நிர்மாணித்தான். உரோமில் வாழ்ந்த சுதந்திரமான மக்களுக்கு பிரஜாவுரிமை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டான். இது கரகல்லாவின் ஆட்சியில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வாகும்.

தோற்றம்

உரோமில் லியோன் எனுமிடத்தில் கி.பி 188 ஏப்ரல் 04 ஆம் திகதி 'லுசியஸ் செப்டிமியூஸ் பஸியோனுஸ்' எனும் பெயரில் கரகல்லா பிறந்தார். இவருக்கு கீட்டா எனும் சகோதரன் ஒருவர் இருந்தார்.

பெயர் மாற்றம்

அந்தோனைன் அரச வம்சத்திற்கும் செவெரென் அரச வம்சத்திற்கும் இடையில் தொடர்பினை ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே, இவரின் 7 ஆவது வயதில் 'மார்கஸ் அயுரேலிஸ் அந்தோனினஸ் சீஸர்' என பெயர் மாற்றம் இவரின் தந்தையால் மேற்கொள்ளப்பட்டது.

கரகல்லா எனும் பெயர் வந்த விதம்

எப்பொழுதும் பிரான்சிய கபாயத்தைப்போல நீண்ட அங்கியை இவர் அணிந்திருந்தமையால் கரகல்லா என இவர் அழைக்கப்பட்டார். எனினும், உத்தியோகபூர்வ பெயராக அது இருக்கவில்லை.

உறவினரை தேடிச் செல்லல்

இவரின் தந்தை நுமீடியன் ஆபிரிக்க சோனக இனத்தைச் சேர்ந்தவர் என்பதால் கி.பி. 203 இல் தமது தந்தை, சகோதரனுடன் வட ஆபிரிக்காவில் வாழ்ந்த தமது உறவுகளை தேடிச் சென்றார்.

திருமணம்

தந்தையின் நண்பரான ப்ளொடினஸ் என்பவரின் மகளாகிய ஃபுல்வியா ப்ளோடில்லா என்பவரை திருமணம் செய்தார். இவர்களுக்கு பெண் குழந்தை ஒன்று பிறந்தது.

கெலிடோனியாவுக்குச் செல்லல்

பிரித்தானியாவுக்குச் சொந்தமான கெலிடோனியா தீவில் நிகழ்ந்த போரினால் கி.பி 208 இல் அப்பகுதியில் இருந்து தனது தந்தை சகோதரனுடன் இணைந்து இவர் வெளியேறினார்.

தந்தையார் மரணம்

கி.பி. 211 இல் பிரித்தானியாவில் இவருடைய தந்தையார் மறைந்தார். இதனால், இவர்களுக்கு இருந்த அரச எதிர்கால பொறுப்புக்கள் அனைத்தும் கரகல்லாவுக்கும் கீட்டாவுக்கும் கையளிக்கப்பட்டன.

"ஒருவருக்கொருவர் சமாதானமாக வாழுங்கள். படையினரை நன்கு கவனியுங்கள்" என தந்தை இரு மகன்களுக்கும் அறிவுரை கூறினார்.

அதிகாரத்தை கைப்பற்ற முயற்சி

சகோதரர்கள் இருவருக்கிடையேயும் அதிகாரத்தைக் கைப்பற்றும் போட்டி உச்சநிலையை அடைந்தது. இதனால், கெலிடோனியாவில் ஏற்பட்ட போராட்டத்தை தனக்கு வாய்ப்பாக நீடிக்க கரகல்லா நடவடிக்கைகளை எடுத்தான்.

"வாழும் கலை அழகிய நடனத்தில் உருவாவதை விட, குத்துச் சண்டையில் உருவாவதற்கு சமனாகும்" என கரகல்லா கூறியுள்ளார்.

மீண்டும் உரோமுக்கு வருதல்

கெலிடோனியா யுத்தத்தின் பின்னர் சகோதரர்கள் இருவரும் தந்தையின் அஸ்தியுடன் உரோமுக்குத் திரும்பினர். [illegible]

எந்நேரமும் சகோதரர்களை ஒற்றுமைப்படுத்த தாயார் முயற்சித்தார். ஆனால், அது தோல்வியில் முடிந்தது.

கொல்லப்படுதல்

கி.பி. 217 இல் மெடியாவில் யுத்தம் நிகழும்போது, தனது படைவீரன் ஒருவனாலேயே கத்தியால் குத்தப்பட்டு கரகல்லா கொலை செய்யப்பட்டான். அப்பொழுது அவனுக்கு இருபத்தொன்பது வயது. இந்நிகழ்வுக்குப் பின்னால் அவனின் எதிரியாகிய ஒபெலியஸ் மெக்ரினஸ் என்பவன் இருந்ததாக நிரூபிக்கப்பட்டது. இந்நிகழ்வோடு தாயும் காலமானார்.

ஒபெலியஸ் மெக்ரினஸ்

உரோம மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்கல்

உரோமப் பேரரசின் சுதந்திர மக்கள் அனைவருக்கும் பிரஜாவுரிமையை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் Constitutio Antoniniana எனும் வரைபை வெளியிட்டான். வரிமூலமான வருமானத்தை அதிகரிப்பதே இதன் உள்நோக்கம் என்றும் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

Constitutio Antoniniana வரைபு

யுத்தங்களில் பங்களிப்பு

தாயின் பக்கபலத்தோடு, கரகல்லா மேற்கொண்ட அலெக்ஸாண்ட்ரியா, பாரசீகத்தைக் கைப்பற்றும் யுத்தங்கள் உள்ளிட்ட பல யுத்தங்களுக்கு தலைமை தாங்கினான்.

சகோதரனை கொலை செய்தல்

கி.பி. 212 இல் தனது பாதுகாவலர்களை பயன்படுத்தி சகோதரனையும் அவனுக்கு சார்பான 20,000 மேற்பட்டோரையும்கொலை செய்தான். உரோமப் பேரரசின் தனி ஆட்சியாளனானான். அத்தோடு, உரோம வரலாற்றில் இருந்து சகோதரனின் பெயரையும் நீக்கினான்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வார கார்ட்டூன் படம்

துருவ ஒளி

பூமியின் வட, தென் துருவங்களான ஆர்க்டிக் மற்றும் அண்டார்க்டிக் பகுதிகளில் தோன்றும் அபூர்வ ஒளிச் சிதறலே 'துருவ ஒளி' ஆகும். இதனை ஆங்கிலத்தில் 'Aurora' என்று அழைப்பார்கள். வட துருவத்தில் தோன்றும் ஒளிச் சிதறல் 'வட துருவ ஒளி' (Aurora borealis) என்றும், தென் துருவத்தில் தோன்றுவது 'தென் துருவ ஒளி' (Aurora australis) என்றும் அழைக்கப்படுகின்றது. இப்பகுதிகளில் ஒளிச் சிதறல் தோன்றும் காலங்களில், நாள் முழுவதும் அது இருக்கின்றபோதும், இரவு வேளையிலேயே அதனைக் கண்டுகொள்ளலாம். துருவ ஒளியானது, பல நிறங்களில் தோன்றும். ஒளிச் சிதறல் தோன்றும் உயரத்தையும் பூமியின் வளிமண்டலத்தில் உள்ள வாயுக்களின் கலவையையும் பொறுத்தே அதன் நிறங்கள் அமையும்.

பொம்மைகளின் மருத்துவமனை

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் பொம்மைகளுக்காக வென்றே ஒரு மருத்துவமனை உள்ளது. 1913 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த மருத்துவமனைக்கு 'DOLL HOSPITAL' (பொம்மை மருத்துவமனை) என்று பெயர். இங்கு பொம்மைகளின் கை, கால், கண், தலைமுடி என அனைத்து விதமான உதிரிப் பாகங்களும் இருக்கின்றன. உடைந்த பொம்மைகளை இங்கு கொண்டுபோய்க் கொடுத்தால், அவற்றுக்குத் தேவையான புதிய உதிரிப் பாகங்களைப் பொருத்தி, மீள்வடிவமைத்துத் தருவார்கள். இவை தவிர, உடைந்த நிலையிலான ஏனைய விளையாட்டுப் பொருட்களை யும் சரிசெய்து மெருகூட்டித் தரும் வசதியும் இங்கு உள்ளது.

★ பறவைகள், பாம்புகள், தவளைகள், எலிகள் போன்றவை சுமார் 5 மணித்தியாலங்களுக்கு முன்பே, பூகம்பம் வரப் போவதை உணர்ந்து கொள்கின்றனவாம்.

★ நாணயங்கள் தயாரிக்க உதவும் உலோகங்கள்-நிக்கல், செம்பு, நாகம்

★ 1862 ஆம் ஆண்டில் தான் கால் அளவுக்கு ஏற்றவாறு பாதணிகளைத் தயாரிக்கும் முறை முதன்முதலில் அறிமுகமானது.

★ தேனீ, எறும்பு, குளவி, மூட்டைப்பூச்சி, சிலந்தி, தேள், வண்ணத்துப்பூச்சி போன்றவற்றில் பெண் இனத்துக்கே சக்தி அதிகம்.

இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2016, ஜூன் 22 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday June 22, 2016.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org